# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்

நீதிமொழிகள் 28:25

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

May - June 2022

Volume : 62

ஆண்டு சந்தா ₹ 100/-

Issue : 3

## Global University Graduation - Dubai, Abudhabi, Hyderabad










## AGVBS Teachers Training














ஆசிரியரிடமிருந்து........!



# வேதத்தின் வழியில் பொருளாதார ஆசீர்வாதம்

(நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து)

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

நீதிமொழிகள் புத்தகத்தில் சாலமோன் ஞானி நமது வாழ்க்கைக்கு தேவையான பல்வேறு ஆலோசனைகளை தேவன் அவருக்கு கொடுத்த ஞானத்திலிருந்தும் அனுபவத்திலிருந்தும் நமக்கு கூறுகிறார். அவைகளில் குறிப்பாக பொருளாதார ஆசீர்வாதங்களுக்கான வழிகளை தேவ ஆவியானவரின் உதவியோடு அவர் நமக்கு எழுதி வைத்துள்ளவைகளை இந்த செய்தியில் சுருக்கமாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவைகளை நாம் கைக்கொள்ளும்போது தேவன் நம்மை பொருளாதாரத்தில் தழைக்கச் செய்வார்.

## 1. பணத்தினால் தேவனை கனம்பண்ணுங்கள், சேவியுங்கள்
## SERVE God with your finances

தேவன் நமக்கு கொடுத்துள்ள வருமானத்தில் நாம் அவருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். “உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்” என்று நீதிமொழிகள் 3:9,10 வசனங்கள் கூறுகிறது. தேவன் நம்முடைய தேவைகள் அனைத்தையும் சந்திக்க வாக்குப்பண்ணியுள்ளார் (பிலி.4:19; மத்.6:33). ஆனால் நாம் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

நாம் முதலாவது நம்முடைய தசமபாகங்களை ஆலயத்திற்கு கொண்டுவந்து தேவனுக்கு கொடுக்க வேண்டும். (மல்கியா 3:10; லேவி.27:30). தேவ ராஜ்யத்தின் பணிக்காக உற்சாகமாக நமது காணிக்கைகளைக் கொடுக்க வேண்டும். மேலும், நம்முடைய பணம் அனைத்தும் தேவன் நமக்கு தந்தது என்ற உணர்வோடு நல்ல உக்கிராணக்காரர்களாக உண்மையோடு பணத்தை கையாள வேண்டும். நாம் தேவனுக்கு பொருளாதாரத்தில் முதலிடம் கொடுக்கும்போதுதான் அவரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணர் என்பதை நம் வாழ்வில் வெளிப்படுத்துகிறோம். அவ்வண்ணம் செய்யும்போது கர்த்தர் நமக்காக வானத்தின் பலகணிகளை திறந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

## 2. கடினமாக வேலை செய்யுங்கள்
## STRAIN every nerve

‘சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான். சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும் என்று

நீதிமொழிகள் 10:4 கூறுகிறது. சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமா புஷ்டியாகும் என்று நீதிமொழிகள் 13:4 கூறுகிறது. நம்முடைய வாழ்க்கையில் அறிவு, திறமைகள் இருந்தாலும் நாம் ஜாக்கிரதையோடு, சுறுசுறுப்பாகவும் கடினமாகவும் உழைக்காவிட்டால் பொருளாதார ஆசீர்வாதத்தை பெற முடியாது. சோம்பேறியை தரித்திரம்தானாக. தேடிவரும் என்று வேதம் கூறுகிறது (நீதி.6:9-11;18:9;19:15; 20:4;13;21:4;22:13;24:30-34). எந்த ஒரு வேலையையும் அற்பமாக எண்ணாமல் கடினமாக உழைக்க வேண்டும். அதேசமயம், வேலைக்கு அடிமையாக மாறிவிடக்கூடாது (Workaholic). நமது சரீர, ஆவிக்குரிய, மனநிலை ஆரோக்கியத்திற்கு போதிய ஓய்வும் இளைப்பாறுதலும் அவசியம் என்று வேதம் போதிக்கிறது.

## 3. சரியாகத் திட்டமிடுங்கள்
## SKETCH out a plan

நம்முடைய வருமானத்தைத் திட்டமிட்டு செலவிட வேண்டும் என்று வேதம் வலியுறுத்துகிறது. வெளியில் உன் வேலையை எத்தனப்படுத்தி, வயலில் அதை ஒழுங்காக்கி, பின்பு உன் வீட்டைக் கட்டு' என்று நீதிமொழிகள் 24:27 கூறுகிறது. ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் (ஆங்கிலத்தில் Careful Planning of the diligent) செல்வத்துக்கு ஏதுவாகும் என்று நீதிமொழிகள் 21:5-ல் வாசிக்கிறோம். நாம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய, நம்முடைய வருமானத்திற்குள் செலவு செய்வது மிகவும் அவசியம். திருமணமான ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கைத் துணையோடு உட்கார்ந்து வரவுசெலவை திட்டமிட வேண்டும். உணவு, உடை, பிள்ளைகளின் படிப்பு, பொழுதுபோக்கு, போக்குவரத்து, வீட்டு வாடகை, சேமிப்பு ஆகியவற்றை வருமானத்திற்குள் திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும். நாம் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்கு பார்க்க வேண்டும் என்று இயேசு கூறினார் (லூக்கா 14:30). மேலும் தேவன் நமக்குக் கொடுத்த வருமானத்திற்காக நன்றி செலுத்தி மனரம்மியத்தோடு வாழவேண்டும். மனரம்மியம் நித்தியவிருந்து என்று நீதிமொழிகள்15:15 கூறுகிறது.

## 4. ஏழைகளுக்கு இரங்குங்கள்
## SUPPORT the needy

“உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்” என்று நீதிமொழிகள் 11:25 கூறுகிறது. நீதிமொழிகள் 28:27-ல் தரித்திரனுக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் என்று வேதம் கூறுகிறது. மேலும் ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் என்றும், ஏழையின் கூக்குரலுக்கு தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன் தானும் சத்தமிட்டு கூப்பிடும்போது கேட்கப்பட மாட்டான் என்றும் வேதம் கூறுகிறது (நீதி. 19:17; 21:13). இந்த வசனங்கள் நாம் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஆதித்திருச்சபையைப் போல் நாமும் தரித்திரரை நினைத்துக் கொள்ள ஜாக்கிரதையாக இருக்கும்போது தேவன் நம்மேல் பிரியமாயிருப்பார். நம்முடைய ஆசீர்வாதத்தை பெருகச் செய்வார். வர்த்திக்கச் செய்வார் (கலாத்தியர் 2:10; 2 கொரிந்தியர் 9:7-10).

## 5. எதிர்காலத்திற்காக சேமியுங்கள்
## SAVE for the future

மூடன் தன் வருமானத்தை சேமிக்காமல் அனைத்தையும் செலவழித்துப் போடுகிறான் (நீதிமொழிகள் 21:20). ஆனால் ஞானமுள்ளவனோ எறும்பைப்போல எதிர்காலத்திற்காக சேர்த்து வைக்கிறான் (நீதி. 6:6-8) என்று வேதம் கூறுகிறது. நமது வருமானத்தில் 10% தசமபாகம், 10% சேமிப்பு, 80% மற்ற செலவுகளுக்காக என்று திட்டமிடுவது நன்மைகளைக் கொண்டுவரும். எதிர்கால தேவைக்காகவும், எதிர்பாராத தேவைக்காகவும் சேமிப்பு அவசியம் (ஆதி.41:34-36).

## 6. யூகித்து முதலீடு செய்வதை விட்டுவிடுங்கள்
## STEER CLEAR of Speculative Investments

ஒரு காரியத்தில் நிச்சயமில்லாத பட்சத்தில் யூகித்து துணிந்து முதலீடு செய்வது ஆபத்தையும் பொருளாதார நஷ்டத்தையும் கொண்டுவரும்.

- **கடன் படாதிருங்கள்**

கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை என்று நீதிமொழிகள் 22:7 கூறுகிறது. நீங்கள் ஏற்கனவே கடன்பட்டிருப்பீர்களானால் அதை அடைக்க முயற்சி எடுங்கள் (சங்கீதம் 37:21).

- **கையடித்து கொடுத்துப் பிணைப்படாதிருங்கள் (Co - Signing)**

கையடித்து உடன்பட்டு, கடனுக்காகப் பிணைப்படுகிறவர்களில் ஒருவனாகாதே. செலுத்த உனக்கு ஒன்றுமில்லாதிருந்தால் நீ படுத்திருக்கும் படுக்கையையும் அவன் எடுத்துக்கொள்ளவேண்டியதாகுமே என்று வேதம் எச்சரிக்கிறது (நீதி.22:26, 27; 17:18).

- **தீவிரமாய் ஐசுவரியவானாகும் முயற்சியில் ஈடுபடாதிருங்கள்**

ஐசுவரியவானாக தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்கு தப்பான். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதி.28:20) என்றும், வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம். கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான் (நீதி. 13:11) என்று வேதம் கூறுகிறது. சூதாட்டம், பந்தயம் கட்டுதல், லாட்டரி போன்றவற்றில் விசுவாசிகள் ஈடுபடக்கூடாது. தீவிரமாக பணக்காரனாக வேண்டும் என்று தவறான வழிகளை முயற்சிக்காதீர்கள். உழைத்து முன்னேற பிரயாசப்படுங்கள். நீதிமொழிகள் 12:11; 23:4,5; 28:22 ஆகிய வசனங்களை வாசியுங்கள்.

## 7. வீண் செலவை தவிர்த்திடுங்கள்
## STOP Wasteful Spending

பொருளாதாரக் குறைச்சலுக்கான காரணங்களில் ஒன்று வீண் செலவு செய்தல். அவசியமற்ற, உபயோகமில்லாத, தரமற்ற பொருட்களை தேவையின்றி வாங்க முயற்சிக்காதிருங்கள். பணத்தை ஒரு காரியத்திற்காக செலவழிக்கும் முன் ஜெபித்து, இது அவசியம் தானா? பிரயோஜனமாயிருக்குமா? கிறிஸ்துவ அறநெறியை பிரதிபலிக்குமா? வீண் செலவைக் கொண்டுவருமா? என்று குடும்பத்துடன் யோசித்து, செலவிடும்போது வீண் செலவைத் தவிர்க்க முடியும்.

## 8. தேவனிடம் ஜெபியுங்கள்
## SEEK God in Prayer

இறுதியாக பொருளாதார ஆசீர்வாதத்திற்காக தேவனை நோக்கி ஜெபியுங்கள். தேவன் நமக்கு ஞானமும், பெலனும் தந்து நம்முடைய கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதித்து, வீண் செலவுகளுக்கு விலக்கி நம்மை காத்துக்கொள்ளாத பட்சத்தில் நாம் பொருளாதார ஆசீர்வாதம் பெற முடியாது. கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் (நீதிமொழிகள் 10:22) என்றும் கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் (நீதி. 28:25) என்றும் வேதம் தெளிவாக கூறுகிறது. கர்த்தர் ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவர் (1சாமு.2:7). ஐசுவரியம் தேவனாலே வருகிறது (1 நாளா. 29:12). ஆகவே நாம் ஜெபத்தில் தேவனை சார்ந்திருந்து, அவரை நம்பி, முயற்சி செய்யும்போது தேவன் நமக்கு ஐசுவரியத்தை சம்பாதிப்பதற்கான ஞானத்தையும் பெலனையும் வாய்ப்புகளையும் அளிக்கிறார் (உபா.8:18; நீதி. 22:4).

அன்பான தேவ ஜனமே, நம்மை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியம். நாம் மேற்கூறிய வேத ஆலோசனைகளின்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது, தேவன் நம்முடைய பொருளாதாரத்தை ஆசீர்வதிப்பார்! விருத்தியடையச் செய்வார்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது
**Tamil District Council of SIAG** என்று எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.
மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.
பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்


Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


## 19. மிஷனரிப் பணி தீவிரமாய் நடைபெற்றது

தொடர்ச்சி

**அன்று**

நீங்கள் உலகமெங்கும் போங்கள் (மாற்கு 16:15) என்ற மிஷனரி அறைகூவல் இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையிலேயே இணைந்திருந்தது. ஆதி சபை எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும் வளர்ந்து வந்தது. மிஷனரிப்பணியில் எருசலேம் சபை தளர்ந்து நின்ற நிலையில் ஆவியானவர் அந்தியோகியா சபையிலே திருவுளம் பற்றினார்.

**பவுல் பர்னபா**

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள். அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியா பட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள் (அப்.13:2-4).

வளர்ந்து வந்த சபையிலே தீர்க்கதரிசிகளாகவும், போதகர்களாகவும் சிறப்பாக பணியாற்றி வந்த பர்னபாவும், சவுலும் ஆவியானவரின் நடத்துதலின்படி கலாச்சாரம் கடந்து பல நாடுகளுக்கும் பயணம் செய்து நற்செய்தி அறிவித்து சபைகளை நிறுவினர். நற்செய்தியை அறிவித்த அப்போஸ்தலர் அற்புத அடையாளங்கள் மூலம் தேவவல்லமையை வெளிப்படுத்தி இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்பதை நிரூபித்துக் காட்டினர்.

**தோமா:**

தோமா முதலாவது பாபிலோனுக்குச் சென்றார். பின்பு பாரசீகம் சென்று ஊழியம் செய்தார். அங்கிருந்து கப்பலில் பயணம் செய்து கி.பி. 52-ல் மலபார் பகுதியிலுள்ள கிரங்கனூர் என்ற இடத்திற்கு வந்து இந்தியாவில் ஊழியத்தைத் தொடர்ந்தார். கி.பி. 72-ல் இரத்த சாட்சியாய் மரித்தார்.

**அந்திரேயா:**

இவர் ரஷ்யாவிலும், துருக்கி நாட்டிலும், கிரேக்க நாட்டிலும் ஊழியம் செய்தார்.

**பிலிப்பு:**

இவர் ரஷ்யா சென்று சிறிது காலம் ஊழியம் செய்துவிட்டு துருக்கி நாட்டிற்குச் சென்று எராப்போலி (கொலோ.4:13) என்ற பட்டணத்தில் தங்கி ஊழியம் செய்தார். இங்கேயே அவர் இரத்த சாட்சியாக மரித்தார்.

எராப்போலியிலிருந்து கொலோசே பட்டணம் சுமார் 24 கி.மீட்டர் தூரம். மத்தேயு எத்தியோப்பியாவிலும், எகிப்திலும் ஊழியம் செய்து மரித்தார். பர்தொலோமேயு அர்மேனியாவிலும், பேதுரு துருக்கி, பாபிலோன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் ரோமிலும் ஊழியம் செய்து மரித்தார். முதல் நூற்றாண்டு முடிவதற்குள்ளாக உலகமெங்கும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி பரவிற்று. சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

## இன்று

ஆரம்ப நாட்களில் நற்செய்தியை அறிவித்து சபைகளை நிறுவும் நோக்கத்துடன் மிஷனரிப்பணி நடைபெற்றது. பின்பு இது தளர்ந்த நிலையில் செயல்பட்டது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பரிசுத்த ஆவியானவர் உலகமெங்கும் ஊற்றப்பட்டார். மறுபடியும் மிஷனரிப்பணி புத்துயிர் பெற்றது. இன்று ஏராளமான மிஷனரி இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. உலகமெங்கும் மிஷனரிப் பணிகள் சிறப்பாய் நடைபெறுகின்றன.

## இந்தியா

இந்தியாவைப் பொறுத்தவரை வெளிநாட்டு மிஷனரிகளின் காலம் முடிந்துவிட்டது என்றே சொல்லலாம். வெளிநாட்டிலிருந்து வந்து இங்கே தங்கியுள்ளவர்கள் பல்வேறு ஊழியங்களை செய்கின்றார்கள். ஆனால் உள்நாட்டிலிருந்து எழும்பியுள்ள மிஷனரிகளே தேசமெங்கும் சென்று மிஷனரிப்பணி செய்கின்றனர். இந்தியாவில் சுமார் 50,000 உள்நாட்டு மிஷனரிகள் மாற்றுக் கலாச்சார மக்கள் மத்தியில் ஊழியம் செய்கின்றார்கள் என்று ஓர் ஆய்வு கூறுகின்றது.

## சீனா

உலகில் அதிகமக்கள் தொகையுள்ள சீனாவில் உள்நாட்டு மிஷனரிகளால் மிஷனரிப்பணி சிறப்பாக நடைபெறுகிறது. கிறிஸ்தவம் என்றால் வெள்ளைக்காரர் பரப்பும் மார்க்கம் என்ற நிலைமாறி வருவது ஓர் ஆரோக்கியமான அறிகுறியே. சீனாவிலிருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் வெளிநாடுகளுக்கு மிஷனரிகளாக சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது. எருசலேமுக்கு போவோம் (யழிஉவ மிலி மூளஷெற்விழியிளது) என்ற பெயரில் இவர்கள் சீனாவிலிருந்து புறப்பட்டு சீனாவிற்கும், எருசலேமுக்கும் இடையிலுள்ள நாடுகளுக்கு சென்றுள்ளார்கள்.

எருசலேமிலிருந்து நமக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி வந்தது. எனவே எருசலேமில் நற்செய்தி அறிவிக்க செல்லுவோம். அதற்கு இடையிலுள்ள அத்தனை நாடுகளிலும் நற்செய்தி அறிவிப்போம் என்று புறப்பட்டுள்ளார்கள். இன்று உலகில் அதிவேகமாக கிறிஸ்தவம் பரவும் தேசம் சீனா தான். அதனால்தான் சீனாவில் பெரிய பொருளாதார ஆசீர்வாதம் பெருகி வருகிறது.

– தொடரும்

**“மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது” (லூக்கா 24:47)**



# ஒப்புரவாகுதல் - Reconciliation

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**
Secretary, Tamil District Council of SIAG,
Senior Pastor, A.G.Church, Vellore-6.

கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்களுக்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்தக் குடும்ப பகுதியில் ஒப்புரவாகுதலைக் குறித்த சில காரியங்களை சுருக்கமாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

வேதாகமம் சகலவிதமான கசப்பையும், கோபத்தையும், மூர்க்கத்தையும், மற்ற எந்தத் துர்க்குணத்தையும் நம்மைவிட்டு நீக்கும்படி அறிவுறுத்துகிறது (எபே.4:31). அநேக நேரங்களில் குடும்ப உறவுகளில் கசப்பை நம் இருதயங்களிலே வைத்திருக்கும்பொழுது, அது ஆரோக்கியமான உறவைகெடுத்து, சத்துருவுக்கு இடமுண்டாக்கி, வீண் பிரச்சனைகளை வீடுகளில் ஏற்படுத்துகிறதை பார்க்கிறோம். ஆகவே, ஒப்புரவாகுதலை முதலாவது நம்முடைய வீட்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். கணவன் மனைவிக்கு இடையே, பெற்றோர், பிள்ளைகளுக்கிடையே, வருத்தங்களையும் கசப்புகளையும் சுமந்து கொண்டிருப்போமானால், ஒப்புரவாக கர்த்தர் உங்களுக்கு உதவிசெய்வாராக. ஒப்புரவாகுதலுக்கான சில எளிய படிகளை உங்கள் முன்பு வைக்கிறேன்.

**1. ஒப்புரவாகுதலுக்காக விசேஷமாக ஜெபியுங்கள்:**
**(Take time to pray specially for Reconciliation)**

எபே.4:26-ல், "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது என்று எழுதப்பட்டிருக்கிறதை வாசிக்கிறோம். ஒருவேளை வாக்குவாதங்களோ, வருத்தங்களோ, கசப்புகளோ, இருதயத்திலிருக்குமானால், ஆண்டவரிடத்தில் ஊக்கமாக இரவு படுக்கைக்கு செல்வதற்குமுன் மாற்றும்படியாக ஜெபிக்கும்பொழுது, நிச்சயமாகவே கர்த்தர் ஒப்புரவாகுதலுக்கான சூழ்நிலைகளையும், திறந்த மனதையும் குடும்பத்துக்குள்ளே கட்டளையிடுவார். ஆகவே, ஒப்புரவாகுதலுக்காக நேரமெடுத்து தீவிரமாக ஜெபியுங்கள். ஜெபமின்னையே, அநேக நேரங்களில் ஒப்புரவாக வேண்டிய தருணங்களை நாம் உணராமல் செய்துவிடுகிறது.

**2. ஆவியானவர் ஊழியம் செய்யவிட்டுக்கொடுங்கள்:**
**(Allow the Holy Spirit to minister to you)**

எபே.4:27-ல், பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய வாழ்க்கையில், சிந்தனைகளில், மனநிலையில் பிசாசு எப்பொழுதுமே குறுக்கிட்டு, தேவபிரசன்னத்தைவிட்டு திசைத்திருப்பி, நம்மை சிக்கல்களில் சிக்கவைக்கிறதை பார்க்கிறோம். பிசாசுக்கு இடங்கொடாமலிருக்க வேண்டுமென்றால், முதலாவது நம்முடைய இருதயத்தில் ஆவியானவருக்கு இடமிருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் எந்த உறவையும் சரிசெய்வதற்கு போதுமானவர். அவருடைய பிரசன்னம் மற்றும் தேவவார்த்தையின் மூலமான அவருடைய கிரியை முழுமையாக நடப்பதற்கு நம்மை கொஞ்சம் விட்டுக்கொடுப்போமென்றால், நம்முடைய குடும்பங்களிலே மிகப்பெரிய பலனை பார்க்க உதவிசெய்வார். ஆவியானவருக்கு இடம் இல்லாத இருதயங்களில், நிச்சயமாக பிசாசு இடம்பிடிக்க தீவிர முயற்சி செய்வான் என்பதை மறந்து விடக்கூடாது.

### 3. உங்களுடைய தவறுகளை உணருங்கள்: (Realize your mistakes)

மத்.7:3-ல், நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன என்று எழுதப்பட்டிருக்கிறதை வாசிக்கிறோம். இங்கே உன்னுடைய சகோதரன் என்ற இடத்தில் உங்களுடைய கணவன், மனைவி, பெற்றோர்கள், பிள்ளைகள் என்று போட்டுக்கொள்ளுங்கள். அநேக நேரங்களில் நாம் பிரச்சனைகளில் நம்முடைய பங்கை உணராமல், மற்றவர்களை குறைசொல்லுவதில் தீவிரமாக இருக்கிறோம். ஒரு குடும்ப பிரச்சனையில், ஒருவர் மட்டுமே பிரச்சனைக்குக் காரணமாக இருக்க முடியாது. ஏதோ ஒருவகையில், இருவருமே பிரச்சனைக்குக் காரணம் என்பதை நாம் உணரவேண்டும். ஆகவே, மற்றவருடைய தவறுகளை உணர்த்திக் காட்டுவதற்கு முன்பு, நம்முடைய தவறுகளை உணர ஆரம்பித்து சரிசெய்தால், கர்த்தர் நிச்சயமாக ஒப்புரவாகுதலை நமக்குக் கட்டளையிடுவார். மாறுவதற்கான ஆழமான விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டியது நம்முடைய கடமை என்பதை நாம் மறந்து போகக்கூடாது.

### 4. ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்: (Forgive each other)

எபே.4:32-ல், நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மன்னிப்பை அனுபவிக்கும் ஒரு கிறிஸ்தவன், பிறரை மன்னிக்காமல் இருக்க முடியாது. நம்முடைய சொந்த மனைவியையோ, கணவனையோ, பிள்ளைகளையோ, பெற்றோர்களையோ மன்னிக்க முடியாத கிறிஸ்தவர்களுடைய இரட்சிப்பு கேள்விக்குறியாக இருக்கிறது.

மன்னிப்பதற்கு முதலாவதாக, நாம் பழைய சம்பவங்களை மறக்கவேண்டும். இரண்டாவதாக, மற்றவர்களுடைய இடத்தில் இருந்து பிரச்சனையை பார்க்கவேண்டும். உதாரணமாக, கணவன் மனைவியினிடத்திலிருந்து பிரச்சனையை பார்ப்பதும், மனைவி கணவனிடத்திலிருந்து பிரச்சனையை பார்ப்பதும் எளிமையான தீர்வை கொண்டுவரும். மூன்றாவதாக, வாய் திறந்து ஆண்டவரிடத்தில் மன்னிப்பை கேட்பதுபோல, ஒருவருக்கொருவர் கேட்கவேண்டும்.

### 5. குடும்ப உறவுகளை மேன்மையாக எண்ணுதல்: (Value the family relationship)

அநேகர் செய்த தவறுகளையே திரும்ப திரும்ப வீட்டில் செய்வதும், பிரச்சனைகள் வரும்பொழுது அதை தீர்ப்பதற்காக ஜெபமோ, மற்றும் எந்த நடவடிக்கையோ எடுக்காமலிருப்பதும் எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை உணராதிருக்கிறார்கள். மற்ற உறவுகளை சரிசெய்ய விரும்புகிற அநேகர் குடும்ப உறவுகளை கவனிக்காமல் விட்டுவிடுகிறதை பார்க்கிறோம். காரணம் என்னவென்றால், குடும்ப உறவின் மேன்மைகளை அநேகர் அறியவில்லை.

மனிதனுக்கிருக்கிற உறவுகளில் மிகவும் பிரதானமான, தேவையான, முக்கியமான உறவு குடும்ப உறவு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதை சரிசெய்ய தீவிரமாக ஜெபிக்க வேண்டும், முடிந்த முயற்சிகளை எடுக்கவேண்டும். மற்றவற்றை கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

இந்த நாட்களில் கசப்புகளோடு, சந்தேகங்களோடு, பிரிவினை எண்ணங்களோடு, இருதய பாரங்களோடு யாராவது இப்பகுதியை வாசித்தால், கர்த்தர் உங்களுக்காகவே இதை எழுதவைத்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். கொஞ்சமும் பிரிவினைகளுக்கு இடங்கொடுக்காதபடிக்கு உடனடியாக ஒப்புரவாகுதலுக்காக தீவிர முயற்சி செய்யுங்கள். நம்முடைய முயற்சியையும், மனநிலையையும் பார்க்கிற ஆண்டவர் நம்முடைய குடும்ப உறவுகள் எவ்வளவு மோசமாக பாதிப்படைந்திருந்தாலும், அதை சரிசெய்து, செவ்வையாக்குவதற்கு உண்மையுள்ளவராக போதுமானவராக இருக்கிறார்.

ஒப்புரவாகுவோம், தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரிப்போம்!



# ரூத்தின் சரித்திரம் : The Book of Ruth

## புத்தக அறிமுகம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

**ரூத்தின் சரித்திர புத்தகம்:**

தமிழ் வேதாகமத்தில் இப்புத்தகம் '**ரூத்தின் சரித்திரம்**' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. அதன்படியே, இது ஒரு சரித்திரத்தைத் தருகிறது. நியாயாதிபதிகள் இஸ்ரவேலை ஆண்டு வந்த காலத்தில் பிரிவினைவாதங்கள், பயங்கரவாதங்கள், கொடுமைகள், விசுவாசத்துரோகப் பின்மாற்றங்கள், உள்நாட்டுப்போர்கள் பெருகியிருந்தன. புறஜாதி மக்கள் நடுவில் வாழ்ந்துவந்த இஸ்ரவேலர் இக்காலத்தில் மிகவும் பரிதபிக்கப்படத்தக்க நிலையில் இருந்தனர். அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான். (நியா.17:6;18:11;19:11;21:25). இக்காலத்தில் (கிமு.1375-1050), இஸ்ரவேல் தேசத்தில் பெத்லகேமைச் சார்ந்த ஒரு குடும்பத்தில் நடந்த சரித்திரச் சம்பவங்களை ரூத் புத்தகம் நமக்குத் தருகிறது.

**ரூத் புத்தகம் தரும் சரித்திர சம்பவம்:**

நகோமி என்ற பெண்ணுக்கும், அவளது குடும்பத்தினருக்கும் அது ஒரு இருண்ட காலமாகவும், துன்பம் நிறைந்த நாட்களாகவும் காணப்பட்டது. அக்காலத்தில் வந்த பெரும் பஞ்சம் அவளையும், அவள் புருஷன் எலிமெலேக்கையும் அவளது இரண்டு ஆண்மக்களான மக்லோன், கிலியோன் ஆகியோரையும் நாட்டைவிட்டு துரத்தியடித்தது. அவர்கள் மோவாப் தேசத்தில் சென்று தஞ்சம் புகுந்தனர். அந்தப் பிள்ளைகள் மோவாபியப் பெண்களை திருமணம் செய்துகொண்டனர். அங்கு வாழ்ந்து வந்த காலத்தில் அக்குடும்பத்தின் ஆண்மக்கள் மூவரும் மரித்துப்போனார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களை சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று மோவாப் தேசத்திலிருந்த நகோமி கேள்விப்பட்டாள். எனவே பெத்லகேமுக்குத் திரும்பிவரும்படிப் புறப்பட்டாள். அவளது மருமக்களில் ஒருத்தியான ஓர்பாள் மறுமணம் செய்து வாழவும், தன் தேசத்தில்தானே தங்கியிருக்கவும் தீர்மானித்துப் போய்விட்டாள். ஆனால் அடுத்த மருமகளான ரூத் என்பவள் தனது மாமியாரையும் அவளது தேவனாகிய யெகோவாவையும் பற்றிக்கொண்டு வாழத் தீர்மானித்தாள்; தனது தகப்பனையும், தாயையும், ஜன்ம தேசத்தையும் விட்டு யூதா தேசத்துக்கு வந்தாள். அவள் எடுத்த தீர்மானத்தை 1:16,17ல் இப்படி வாசிக்கிறோம்.

அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.

நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்.

மோவாப் என்ற புறஜாதியினரின் தேசத்திலிருந்து ரூத் யூதா தேசத்துக்கு, குறிப்பாக பெத்லகேமுக்கு வந்து சேர்ந்தாள். (மோவாபியர் லோத்துவுக்கும் அவளது மகளுக்கும் முறைகேடாய்ப் பிறந்த சந்ததியினராவர். விக்கிரக ஆராதனைக்காரர்கள், கோமோஷ், அல்லது காமேசு என்னும் தெய்வத்தை வழிபட்டவர்கள், (எண்.21:29; 1இராஜா.3:26,27). விபச்சாரத்துக்கும் வேசித்தனத்துக்கும் தங்களை விற்றுப்போட்டவர்கள் (எண்.25). யெகோவா தேவனை பின்பற்றாதவர்கள்; விருத்தசேதன உடன்படிக்கையில்லாதவர்கள்).

ரூத் மோவாபிலிருந்து வந்திருந்தாலும், யூதா தேசத்தில் போவாஸ் என்னும் பெரும் செல்வந்தனாயிருந்த விவசாயி, அவள்மேல் அக்கரைக் காட்டினான். ரூத்தின் நற்குணங்களால் கவர்ந்திழுக்கப்பட்ட போவாஸ், நகோமிக்கு உறவின்முறையாயிருந்தான்.

இந்த போவாஸ் ரூத்தை விவாகம் செய்தான். அவர்களுக்கு ஒரு குமாரன் பிறந்தான். இந்த மகனுக்கு ஓபேத் என்று பெயர். அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன். இந்தத் தாவீதின் சந்ததியில் உலக இரட்சகரான இயேசுகிறிஸ்து வந்து பிறந்தார். இப்படி ரூத், தாவீது அரசனின் முப்பாட்டியாக அறியப்படுகிறாள்.

### ரூத்துக்கு கிடைத்த வாழ்வு:

புறஜாதியப் பெண்ணாகிய ரூத் பெத்லகேமுக்கு வந்தபோது மறுவாழ்வு கிடைத்தது. அப்பத்தின் வீடாகிய பெத்லகேமுக்கு வரும் அனைவருக்கும் அவ்வித உன்னத வாழ்வு நிச்சயம் உண்டு. வசனத்தின் வாழ்வும், வசனம் பிரசங்கிக்கப்படும் சபையின் வாழ்வும் எவரையும் உயர்த்திடுமே!

ரூத்தின் மறுவாழ்வை ஏழு குறிப்புகளில் காணலாம்:

**1.தயவு** (ரூத் 2:2)

மோவாபியப் பெண்ணிற்கு யூதரின் கண்களில் தயவு!

இளவயதில் விதவைக்கு திருமணமாகாத செல்வந்தனாகிய போவாஸின் கண்களில் தயவு!!

தன்னைக் காண்கிற அந்நிய தேசத்தின் வேலையாட்கள் அனைவரது கண்களிலும் தயவு!!!

**2.வயலுக்குள் இறங்கும் ஆசீர்வாதம்** (2:7)

வரப்பில் நின்றவள் வயலுக்குள் இறங்கும் கிருபை. மந்தைக்குப் புறம்பான நாம் மந்தையில் சேருகிற கிருபை.

**3.அரிக்கட்டுகள் நடுவே** (2:15)

வயலில் இறங்கியவள் கட்டுகளின் நடுவே கதிர்பொறுக்க அநுக்கிரகம்! ஆசீர்வாத அரிக்கட்டுகளின் நடுவே நிறுத்தப்படுகிற அனுபவம்.

**4.அரிகளில் சிலதை சிந்தவிடும் கிருபை** (2:16)

அள்ளிக்கொடுக்கும் ஆசீர்வாதம் ஆண்டவர் கரம் கொட்டித் தருகிறது.

**5.களத்துக்குப் போகிற ஆசீர்வாதம்**

- **நீ குளித்து...,** 3:3 இது சடங்காச்சாரமாக ஒரு மணவாட்டி மணவாளனைச் சந்திக்கச் செல்கையில் செய்யும் சுத்திகரிப்பு (எசே.16:9-12). ஆன்மீக சுத்திகரிப்பு அவசியம்.

- **எண்ணெய் பூசி...,** 3:3 பரிசுத்தாவியின் அபிஷேகம், அபிஷேக நாதருடன் நம்மை நெருங்கச் சேர்க்கிறது.
- **உன் வஸ்திரங்களை உடுத்தி...,** 3:3 விதவைக்குரிய துக்கநாட்களின் வஸ்திரங்களை மாற்றி, மணவாட்டிக்குரிய வஸ்திரங்களை உடுத்தும் அனுபவம் இது. நமது பாவமாகிய சாவின் வஸ்திரங்களைக் களைந்து இரட்சிப்பின் வஸ்திரங்களை உடுத்துதல்.
- **களத்திற்குப் போய்...,**3:6 தானியம் போரடிக்கிற களம், மகிழ்ச்சியின் களம். பாடுபட்டு பயிரிட்ட பலனைப்பெறும் களம். போவாஸின் களத்திற்குச் சென்று அவன் பாதத்தண்டை காத்திருக்கும் வாழ்வு. கிறிஸ்துவும் நம்மிடம் இதைத்தானே எதிர்பார்க்கிறார்.

### 6.தலையில் சுமக்கும் வாற்கோதுமை 3:15

தயவு கிடைத்த ரூத், வயலுக்குள் இறங்கிய ரூத், அரிக்கட்டுகளின் நடுவிலே கதிர்பொறுக்கிய ரூத். வேண்டுமென்றே சிந்தவிடப்பட்டதைப் பொறுக்கியெடுத்த ரூத், களத்துக்குச் சென்ற ரூத், இப்பொழுதோ ஊரார் அறிய தலையிலே ஆசீர்வாதத்தை சுமக்கிற மறுவாழ்வு! கிறிஸ்துவில் நமக்கு கிடைக்கும் செழிப்பான வாழ்வும் இத்தகையதேயாகும்.

### 7.போவாசுக்கு மனைவியாதலும், ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றெடுத்தலும் 4:13

அடிமையான ரூத்தை மீட்டுக்கொண்ட போவாஸ், அவளைத் திருமணம் செய்கிறான்.

## ரூத்தின் புத்தகம் அள்ளித்தரும் நடைமுறை ஆவிக்குரிய செய்திகள்:

- நகோமியையும், ரூத்தையும் பராமரித்து நடத்திய தேவனுடைய பராமரிப்பு இன்று நமக்குமுரியதே.
- தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை இப்புத்தகம் நமக்குத் தருகிறது: அந்நிய ஸ்திரீயான ரூத்தை கிரயம் செலுத்தி மீட்டு, தேவ ஜனங்களுடன் போவாஸ் இணைத்தது போலவே கிறிஸ்துவும் புறஜாதியரான நமக்காகக் கிரயம் செலுத்தி நம்மை தேவனுடைய ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்கிறார்.
- ரூத் புத்தகத்தின் முதலாம் அதிகார சம்பவங்கள் மோவாப் தேசத்தில் நடக்கிறது. ரூத் போவாசைப்பற்றி அறியவில்லை. நாமும் உலகில் அந்நியராயிருந்தோம்.
- இரண்டாம் அதிகார சம்பவங்கள் பெத்லகேமில் ஒரு வயலில் நடக்கிறது. ஏழையாக கதிர்பொறுக்கும் ஒரு பெண்ணாக ரூத் போவாஸை செல்வந்தனாகவும், இரக்கமுள்ளவனாகவும் காண்கிறாள். நமது திக்கற்ற வாழ்க்கையில் இயேசுவும் இவ்விதமே நமக்குக் காட்சியளிக்கிறார்.
- மூன்றாம் அதிகாரம் பெத்லகேமில் ஒரு களத்தில் நடக்கும் சம்பவங்கள். இங்கு போவாஸின் பாதத்தில் பணிந்துகொள்ளும் ரூத், அவனது வாக்குறுதிகளை நம்புகிறாள். கிறிஸ்துவுடன் உள்ள உறவில் நாம் வளரும்போது, அவரது பாத சரணாகதியே நமக்கு அவசியம்.
- நான்காம் அதிகாரம் பெத்லகேமின் பட்டண வாசலில் நடக்கும் சம்பவங்கள், இங்கு ரூத் கதிர்பொறுக்கும் ஏழைப் பெண்ணல்ல போவாசுக்குச் சொந்தமானவள். அவனுக்குள்ளதெல்லாம் அவளுக்குரியவையே! அவள்

கதிர்பொறுக்கிய வயலும் இன்று அவளுக்குரியதே!! கிறிஸ்துவும் தம்மையே நமக்குத் தந்து, தமக்குரியவைகளையும் நமக்குத் தந்திருக்கிறார்.

இந்த நான்கு அதிகாரங்களிலுள்ள சம்பவங்களும் ஒரு விசுவாசிக்குக் கிறிஸ்துவுடனுள்ள உறவினைச் சித்தரிப்பதாகக் காண்கிறோம்.

போவாஸ் **"உறவின்முறை மீட்பர்"** **(Kinsman-Redeemer)** என்னும் நிலையில் நகோமியையும், அவளது நிலபுலன்களையும், மக்லோனின் விதவை-மனைவியாகிய ரூத்தையும் மீட்டுக்கொண்டான்: **"உறவின்முறை மீட்பர்"** என்பவருக்குரிய தகுதியனைத்தும் போவாஸ்-க்கு இருந்தன.

- நகோமியின் வயல்நிலங்களை விலைகொடுத்து வாங்குவதற்கும் மரித்துப்போன மக்லோனின் சுதந்தரத்தில் அவன்பேரை நிலைநிறுத்து வதற்கும் போவாஸ் நகோமிக்கு **இரத்த சம்பந்தமான உறவின்முறையானா யிருந்தான்,** அல்லது அவளது குடும்பத்தைச் சார்ந்தவனாயிருந்தான் என்று சொல்லலாம் (லேவி. 25:25).
- அந்த **நிலங்களை மீட்டுக்கொள்ளும் செல்வத்திரட்சியும்** அவனுக்கிருந்தது.
- இறந்துபோன மக்லோனின் மனைவிகளாயிருந்த **ரூத்தை திருமணம் செய்ய அவன் விருப்பமுள்ளவனாயிருந்தான்.**
- நிலங்களை மீட்டுக்கொள்ளவும் ரூத்தைத் திருமணம் செய்யவும் **விடுதலையுடைய சுயாதீனனாயிருந்தான் (A free man).**

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் இதையே நமக்குச் செய்துள்ளார்

- "அவர் நமக்குள்ளே வாசம்பண்ணினார்"
- ஆதலால் பிள்ளைகளே மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர் களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்... (யோவான் 1:14; எபி. 2:14).
- நம்மை விலைக்கிரயமாய் வாங்கிக்கொள்ள, (மீட்டுக்கொள்ள) தமது இரத்தத்தையே சிந்தி ஜீவனைக்கொடுத்தார், (1பேதுரு 1:18,19); அத்தனைக்கும் பெரிய ஐசுவரியவான் அவர் (எபே. 1:7; தீத்து 2:14; எபி. 9:12).
- தமது தியாகபலியின் மூலம் நம்மை திரும்பவும் கிரயம்கொடுத்து வாங்கிக்கொள்ள விருப்பமுள்ளவராய் இருந்தார்; இன்றும் அதே நிலையில் முழு உலகத்தையும் காண்கிறார், (எபே.5:25-27). மனைவியின்மேல் அன்புவைக்கும் ஒரு புருஷனுடைய தியாக அன்புக்கு இணையான அன்பு என இதனை பவுல் விவரிக்கிறார்.

மனுக்குலத்தின் மிகப்பெரிய மீட்பர் இயேசு. ரூத்தின் புத்தகம் இந்த உண்மையை நமக்கு முன் நிழலோட்டமாகக் காட்டுகிறது.

**முதலாம் அதிகாரத்தில்,** போவாஸ் யாரென்றுகூடத் தெரியாமலிருந்தாள் ரூத்.

**இரண்டாம் அதிகாரத்தில்,** ஒரு வேலைக்காரியாக போவாஸ்-ன் வயலில் கதிர் பொறுக்கும் ரூத், அவன் தரும் உதவிகளையும் பரிசுகளையும் பெறுகிறாள்.

**மூன்றாம் அதிகாரம்,** திருப்புமுனை சம்பவங்களைத் தருகிறது.

ரூத் அவனது பாதத்தில் அமர்ந்து அவன் தந்த வாக்குறுதிகளை நம்புகிறாள்.

தன்னை போவாஸ்-க்கு அர்ப்பணித்த ரூத்துக்கு கிடைத்த பலன்கள் **நான்காம்**

**அதிகாரத்தில்** சொல்லப்பட்டுள்ளன. இங்கு அவள் ஏழையான கதிர்பொறுக்கும் பெண்மணி அல்ல. போவாஸ்-ன் மனைவியாகவும், அவனுக்குரிய அனைத்துக்கும் சொந்தக்காரியாகவும் காணப்படுகிறாள்.

ஏராளம் விசுவாசிகள் 2-ம் அதிகாரத்தில் கதிர்பொறுக்கும் ரூத்தின் அனுபவத்தில் நின்றுவிடுகிறார்கள். சிந்தினதைப் பொறுக்கி, தங்கள் கஷ்டமான வாழ்க்கைப் பாதையில் தங்களால் முடிந்ததைச் செய்கிறார்கள். தேவன் தரும் ஆசீர்வாதங்களை விரும்பும் இவர்கள், தேவனோடு நெருங்கிய உறவுக்குள் வராமலிருக்கிறார்கள்.

தேவன் இவ்வுலகில் இன்றும் செயல்படுகிறார் என்பதை ரூத் புத்தகம் நமக்குச் சொல்லுகிறது. தமக்கென ஒரு மணவாட்டியைத் தேடுகிறார். பெரும் அறுவடையையும் செய்ய விரும்புகிறார். அழிந்துபோகும் ஆத்துமாக்களை இரட்சிக்க தேவன் வைத்திருக்கும் மாபெரும் திட்டத்தில் நமது பங்கு என்னவென்று நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

ரூத் புத்தகச் சம்பவங்கள் கொடுமையும், தேவனுக்கு பிரியமற்றக் காரியங்களும் நிறைந்து காணப்பட்ட நியாயாதிபதிகளின் ஆட்சியின் காலமாகும். இன்றைய நமது உலகமும் அதிலிருந்து பெருத்த வித்தியாசமானதல்ல, இவ்வுலகத்தையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தால் கோபமும் எரிச்சலும்தான் நம்மில் நிறையும். மாறாக, கர்த்தர் நமக்குக் காட்டும் வயல் எதுவெனக் கண்டு உண்மையுடன் வேலை செய்தால், அவரது கிருபையும், அன்பும் மகிழ்ச்சியும் நமக்குக் கிடைக்கும்.

### நியாயாதிபதிகளின் காலம் ராஜா இல்லாத காலம்

1 சாமுவேலின் காலம் மக்கள் விரும்பிக் கேட்டுப்பெற்றுக்கொண்ட சவுல் ராஜாவினால் அவதியுற்ற காலம். ஆனால் 2 சாமுவேலின் புத்தகமோ கர்த்தரின் இருதயத்துக்குப் பிரியமான தாவீது ராஜா ஆட்சிக்கு வந்த காலம்.

எனவே, ராஜா இல்லாத நமது காலத்திலும் இயேசுவை நமது ராஜாவாக நம் இதயத்தில் கொண்டால், அவரை நம்மிலிருந்து ஆளுகைசெய்ய அனுமதித்தால், ரூத்தின் அர்ப்பணத்துக்கே கிடைத்த ஆசீர்வாத பலன்கள் நமக்கும் கிடைக்கும்.

---

## அனுதின கிறிஸ்தவன்

தேவன், நாம் அவரை அனுதினமும் பின்பற்றி அவருடைய வழிகளில் வாழ வேண்டும் என்று விரும்புகிறார். நாம் கீழ்க்கண்ட காரியங்களை அனுதினமும் செய்ய வேண்டும் என்று வேதம் நமக்கு போதிக்கிறது.

1. அனுதின ஜெபம் (அப்பாஸ்தலர் 2:42; சங்கீதம் 86:3).
2. அனுதின வேத தியானம் (அப்போஸ்தலர் 2:47; 17:11; சங்கீதம் 1:1-2).
3. அனுதினத் துதி (சங்கீதம் 72:15) .
4. அனுதினமும் சுவிசேஷம் அறிவித்தல் (அப்போஸ்தலர் 2:47, 5:42).
5. அனுதினமும் பரிசுத்தம், சுத்திகரிப்பு (எண்.29:6; ரோமர் 12:1).
6. அனுதினமும் சிலுவை சுமத்தல் (லூக்கா 9:23).
7. அனுதினமும் புத்தி சொல்லுதல் (எபிரெயர் 3:13).

# வெயிலைச் சமாளிப்பது எப்படி?
## HOW TO BEAT THE HEAT?

இந்த ஆண்டில் கோடைக் காலம் தொடங்கியதை அடுத்து தமிழகம் மற்றும் தென் மாநிலங்களில் வெயில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. கோடை வெப்பத்தால் சென்ற ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம். இப்போதே முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தால், உயிரிழப்புகளைப் பெருமளவு தடுக்க முடியு ம். கொளுத்தும் கோடை வெயிலைச் சமாளிக்க எளிய வழிகள் உண்டு.

**வெப்பத்தைத் தணிக்க:**

கோடையில் தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும். மூன்றிலிருந்து ஐந்து லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம். ஐஸ் தண்ணீரை விட, மண் பானைத் தண்ணீர் நல்லது. எண்ணெயில் பொரித்த, வறுத்த, கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். சர்க்கரை அதிகமுள்ள இனிப்புப் பலகாரங்கள், கிரீம் மிகுந்த பேக்கரி பண்டங்கள், பர்கர், பீட்ஸா, ஐஸ்கிரீம் போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது. அதே போல், சூடான, காரமான, மசாலா கலந்த, உப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இட்லி, இடியாப்பம், தயிர்சாதம், மோர் சாதம், கம்பங்கூழ், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, கேரட், பீட்ருட், பீர்க்கங்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, பாகற்காய், புடலை, அவரை, முட்டைக்கோஸ், வாழைத்தண்டு, வெங்காயப் பச்சடி, தக்காளிக்கூட்டு முதலியவை சிறந்த கோடை உணவுகள். மாலை வேளைகளில் வெள்ளரி சாலட், தர்பூசணி சூப், தக்காளி சூப் வகைகளைச் சாப்பிடலாம். திராட்சை, சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை, மாதுளை, முலாம் பழம், ஆப்பிள் போன்றவற்றின் பழச்சாறுகளையும் அருந்தலாம். நுங்கு, கிர்ணி, கொய்யா போன்றவையும் உடல் வெப்பத்தைத் தணிக்க உதவும்.

காபி, தேநீர் மற்றும் குளிர்பானங்கள் குடிப்பதைக் குறைத்துக் கொண்டு, இளநீர், நீர்மோர், நன்னாரி சர்பத், பானகம், பதநீர் முதலியவற்றை அதிகமாகக் குடிக்கலாம். இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கால்சியம், மெக்னீசியம் முதலிய தாதுக்கள் உடலின் வெப்ப நிலையை உள்வாங்கி, சுற்றுச் சூழல் வெப்பநிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றன. இதனால், உடலில் நீரிழப்பால் ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாகக் குறைகின்றன.

**வெயிலைச் சமாளிக்க :**

கோடைக் காலத்தில் தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது. பகலில் வெளியில் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தலைக்குத் தொப்பி போட்டுக் கொள்ள வேண்டும் அல்லது குடை கொண்டு செல்ல வேண்டும். கண்களுக்குச் சூரியக் கண்ணாடி அணிந்து கொள்ளலாம். சருமத்தில் 'சன் ஸ்கிரீன் லோஷ'னைப் பூசிக்கொள்ளலாம். கைவசம் சுத்தமான தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம். காற்றோட்டமான கதர், பருத்தி ஆடைகள் கோடைக் காலத்துக்கு ஏற்றவை. இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து, தளர்வான ஆடைகளை அணிய வேண்டியது முக்கியம். ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வரும் வெயில் ஒரு சவால் தான். ஆனால், அதில் இருக்கும் ஆபத்துகளை முழுமையாகப் புரிந்துகொண்டால், அதன் பாதிப்புகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். நம் ஆரோக்கியம் நம் கையில்!

– பொதுநல மருத்துவர்



# இயேசுவோடு நடப்பது


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


நம்முடைய பெலவீனமான கையை நாம் தேவனுடைய கரத்தில் ஒப்படைக்கும்போது அவர் நம்மை நேர்த்தியாய் நடத்துகிறவராக இருக்கிறார். பேதுரு கடலில் அமிழ்ந்து போகிறேன் என்று ஆண்டவரிடம் கதறியபோது ஆண்டவர் அவன் கையைப் பிடித்துத் தூக்கி நடக்க பண்ணினார். இயேசுவோடு நாம் நடக்கும்போது, அவர் நம்முடைய பட்சமாக இருக்கும்போது, அவர் பிரசன்னத்தை நாம் உணரும்போது, அவர் நம்மை ஆசீர்வதிப்பார். 1 யோவான் 1:1,3, இயேசு இந்த உலகத்தில் இருந்தபோது, அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட சீஷர்கள் அவரோடு எப்படி நடந்தார்கள், இயேசு அந்த சீஷர்களோடுகூட என்னசெய்தார் என்று நாம் இங்கு காண்போம்.

பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய 3 சீஷர்களை தேவன் தம்முடைய நெருக்கத்தில் வைத்துக்கொண்டு, எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்றார். அவர் எப்படி ஊழியம் செய்கிறார் என்று பார்க்க வைத்தார். அவர்களை நம்பி ஊழியத்தை ஒப்படைத்துவிட்டு பரத்திற்கு ஏறிச்சென்றார். 1 யோவான் 1:1-ல், நாங்கள் கேட்டதும் (வார்த்தையை, சத்தத்தை), கண்களினால் கண்டதும் என்று சீஷர்கள் கூறுகிறார்கள். அவர்கள் அவரைக் கண்களினால் கண்டிருக்கின்றார்கள். மலைப்பிரசங்கத்தில் அவர் போதித்தப்போது சீஷர்களும் மற்றவர்களும் அவரை நோக்கிப்பார்த்திருப்பார்கள். இயேசுவை தங்கள் கைகளினால் தொட்டுப் பார்த்திருப்பார்கள். இயேசுவின் சத்தத்தைக் கேட்கவும், அவரைப் பார்க்கவும், அவரோடு ஐக்கியம் கொள்ளவும் அவர் நம்மைத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

1 யோவான் 2:6, அவர் நடந்தபடியே நாம் நடந்து கொள்ளவேண்டும். அவர் வெளிச்சத்தில் நடந்ததுபோல நாம் நடந்து கொள்ளவேண்டுமானால், நம்முடைய அக்கிரமம், பாவம் ஆகியவற்றை நாம் அறிக்கைசெய்து மனந்திரும்பி அவரோடு ஐக்கியம் கொள்ளவேண்டும். நீங்கள் அவர் கரத்தைப் பிடித்துக்கொண்டு நடப்பீர்களானால், விட்டுவிட நேரிடலாம். அவர் உங்கள் கையைப் பிடித்துக்கொள்ளும்படி கேளுங்கள். அவர் ஒருநாளும் உங்கள் கையை விட்டுவிடாமல் தொடர்ந்து நடத்துவார். அவர் உண்மையுள்ள தெய்வம்.

**1.**மத்தேயு4:19-24, பேதுருவிடமும், அந்திரேயாவிடமும் என்னைப் பின்பற்றி வாருங்கள் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். வேறு இரண்டு பேரையும் அப்படி அழைத்தார். அவர்கள் தகப்பனையும், வலைகளையும் விட்டுவிட்டு உடனே அவருக்குப்பின் சென்றனர். நம்மை அழைக்கிற தேவன் நம்மைப் பார்த்து, 'எனக்குப் பின்னே வாருங்கள்' என்று கூறுகிறார். அவருக்குப் பின்சென்று அவரைப் பின்பற்றுகிறவர்களாக மாறவேண்டும். இயேசு இவ்வுலகில் இருந்தபோது தம்முடைய சீஷர்களோடு பட்டணங்கள், கிராமங்கள்தோறும் நடந்துசென்று ஜெபஆலயங்களில் உபதேசித்து (Teaching) தெருக்களில் பிரசங்கம் (Preaching) பண்ணினார்.

வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினார். அவரோடு நடக்கவேண்டுமானால் அவருடைய அழைப்பு, தெரிந்தெடுத்தலின் சத்தத்தை நாம் கேட்க வேண்டும்.

நான் பக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். கிறிஸ்தவப் பள்ளியில் படித்ததினால், வேதத்தையும் வசனங்களையும் நன்கு கற்றறிந்திருந்தேன். ஆனாலும் இரட்சிப்பின் நிச்சயம் இல்லாதவளாக இருந்தேன். ஜீவபுத்தகத்தில் உன்பெயர் எழுதப்பட்டிருக்கின்றதா? மரித்தால் நீ பரலோகத்திற்குப் போவாயா? என்ற சத்தத்தை ஒருநாள் கேட்டு என்வாழ்வை அவரிடத்தில் ஒப்புவித்தேன். என் பலவீனமான கையை அவர் கரத்தில் ஒப்படைத்தேன். 55 வருடங்களுக்கும் மேலாக அவர் என்னை நடத்திக்கொண்டிருக்கிறார். நம்முடைய மகாவறட்சியான காலங்களிலும், நமக்கு இஷ்டமில்லாத சூழ்நிலைகளிலும், இருளின் பாதைகளிலும், என்னசெய்வது என்று தெரியாத சூழ்நிலைகளிலும் அவர் நம்மை நடத்துவார், நம்மிடம் பேசுவார். அவர் உண்மையுள்ளவர். அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார்.

மத்தேயு 11:11, பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை உவமைகள் மூலம் அவர்களுக்குப் போதித்தார். உவமை என்றால் தெரிந்த காரியத்தை வைத்துக்கொண்டு தெரியாத சத்தியங்களைக் கற்றுக்கொடுப்பதாகும். இராஜ்யத்தின் முக்கியமான காரியங்களையும், திறவுகோல்களையும் கற்றுக்கொடுத்தார். விசுவாசம்தான் முக்கியமான திறவுகோலாகும். கானானிய ஸ்திரீயைப் பார்த்தும், பெரும்பாடுள்ள ஸ்திரீயைப்பார்த்தும், “உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'' என்றார். சீஷர்களின் அவிசுவாசத்தை அவர் கடிந்துகொண்டிருக்கிறார். இயேசுவின் நாமமும் திறவுகோல். அவர் நாமத்தில் கேட்கும்போது நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

### I.மாற்கு 3: 15 தம்மோடு இருக்கவும்

எதற்கு சீஷர்களாய் அழைக்கிறார்? தம்மோடு ஐக்கியமாய் இருப்பதற்கு. முதலாவது நடந்துசெல்லும்போது போதித்தார். மத்தேயு5:1; 2 சீஷர்கள் வந்தார்கள். இயேசு போதித்தார். அவருடைய போதனைகள் வேதாகமத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றது. அதை வைத்துத்தான் நமக்குப் போதிப்பார். புதிதாக போதிக்கமாட்டார். இயேசு வாயைத்திறந்து போதித்தவைகள் 5,6,7 ஆம் அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கின்றது. நீங்கள் தான் ஒளி என்றார். புதிய வைரஸ், யுத்தங்கள், பஞ்சம், இயற்கை பேரழிவுகள் போன்றவற்றால் சூழ்ந்துள்ள இருளான இவ்வுலகிற்கு நம்குடும்பம் தான் வெளிச்சத்தைக் கொடுக்கவேண்டும். நாம்தான் இச்சமூகம் அழிந்துவிடாமல் இருக்க உப்பாக இருக்க வேண்டும். 6 ஆம் அதிகாரத்தில் நாம் எப்படி ஜெபிக்க, உபவாசிக்க, தானதர்மம் செய்யவேண்டும் என்று பார்க்கிறோம்.

### II.எப்படி ஊழியம் செய்யவேண்டுமென்று கற்றுக்கொடுத்தார்

வியாதியஸ்தர்களை சுகப்படுத்தவும், பிசாசுகளைத் துரத்தவும் பழக்குவித்தார். இதுதான் உறவுள்ள சீஷத்துவம் என்று அழைக்கப்படுகிறது. அவர் தம்முடைய வார்த்தையினால் அசுத்த ஆவிகளைத் துரத்தினார். நாமும் இயேசு என்ற நாமத்தைச் சொல்லும்போது அவை நடுங்கி ஓடிவிடும். 2000 ஆண்டுகளுக்குமுன் இயேசு அவனை சிலுவையில் தோற்கடித்துவிட்டார்.

தோற்கடிக்கப்பட்ட சத்துரு என்று நாம் அவனிடம் கூறும்போது அவன் நடுங்கி ஓடிவிடுவான். 12 வயது சிறுமியை இயேசு உயிரோடு எழுப்பியதைப் பார்த்த பேதுரு தொற்காள் மரித்தபோது அவளை உயிரோடு எழுப்பினார். காற்றையும் கடலையும் இயேசு அதட்டி அமைதிப்படுத்தினார். உங்கள் குடும்பத்தில் வீசும் எதிர்காற்றையும் அதட்டி அடக்க தேவன் நமக்கு அதிகாரம் தந்திருக்கின்றார். அவர்கள் ஒரு ஒருவேளை நம் குடும்பத்தாராக இருக்கலாம் அல்லது மரியாதைக் குரியவர்களாக இருக்கலாம். அதட்டுகிறேன் என்று சத்தமாக அதட்டாதீர்கள். மனதிற்குள்ளேயே விசுவாசத்தில் கட்டுங்கள். எதிரான போராட்டங்கள் முடிவுக்கு வந்துவிடும். திமிர்வாதக்காரனை இயேசு தம்வார்த்தையினால் சுகமாக்கினார். "வார்த்தை நம்வாழ்வில் அற்புதம்செய்யும்". வீட்டில் எதிர்மறையாகப் பேசிப்பழகாதீர்கள். பிள்ளைகளைக் குறித்தும், சூழ்நிலைகளைக் குறித்தும் நேர்மறையாகப் பேசுங்கள். "ஜீவனுள்ள வார்த்தைகள் ஜீவனுள்ள கிரியைகளைச் செய்யும்". குருடர்களை சுகமாக்கின கர்த்தர், எவ்வகை வியாதியையும் சுகமாக்குவார். 5 அப்பங்கள் 2 மீன்களைப் பெருகச்செய்தவர் உங்களுக்குள்ள கொஞ்சத்தையும் பெருகச்செய்ய முடியும்.

"பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே" என்று ஜெபம்பண்ணக் கற்றுக்கொடுக்கிறார். மத்தேயு 15-ல், ஜெபத்தின் மேன்மையைக் காண்பிக்கின்றார். கெத்செமனேக்கு அழைத்துச் சென்று "சோதனைக்குட் படாதபடி'' ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார். இயேசுவோடு நடந்தால் ''ஒருசிலபாடங்களை'' நமக்கு கற்றுக்கொடுப்பார். நம்மூலம் ''ஒருசில அற்புதங்கள்" நடைபெறும்படி நம்மைத் தகுதிப்படுத்துவார்.

மத்தேயு 10:1, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் நோய்களையும் குணமாக்கவும் அதிகாரம் கொடுத்தார். இயேசுவோடு நடக்கும்போது போதிப்பார், ஊழியம் செய்ய பெலப்படுத்துவார், அசுத்த ஆவிகளைத் துரத்தவும் வியாதிகளை குணமாக்கவும் அதிகாரம் கொடுப்பார்.

**III.**சிலுவைப்பாடு மரணத்தைக் குறித்துப் பேசினார். அவரோடு நடந்தால் எதிர்காலத்தின் காரியங்களை நமக்கு வெளிப்படுத்துவார்.

**IV.**இரண்டாம் வருகை மற்றும் கடைசிக்கால அடையாளத்தைக் குறித்துப் பேசுகிறார். மத்தேயு, மாற்கு, லூக்காவில் யுத்த செய்திகள், கொள்ளை நோய்கள், ஆகியவற்றைக் குறித்துப் பேசியிருக்கின்றார். பெருந்திண்டியினாலும், வேண்டாத காரியத்தினாலும், நம் இருதயம் பாரமடையாதபடி நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும்.

இயேசு, சீஷர்களை அழைத்தார். அவர்களுக்குப் போதித்தார், எப்படி ஊழியம் செய்யவேண்டுமென்று காண்பித்தார், அவருடைய சொந்த வாழ்வில் என்ன நடைப்பெறப் போகிறது என்று வெளிப்படுத்தினார். உலகத்தில் என்ன நடைப்பெறப் போகிறது என்று சீஷர்களுக்குப் போதித்தார். கடைசியாக, மத்தேயு 28:18-ல், புறப்பட்டுப் போய் சீஷராக்க வேண்டும் என்ற பிரதானக் கட்டளையை நம் எல்லாருக்கும் கொடுத்திருக்கிறார். சுவிசேஷம் அறிவிப்பது நம்மேல் விழுந்த கடமையாக இருக்கின்றது. இயேசுவோடு நடப்போமானால், இவையாவையும் செய்ய தேவைப்படும் கிருபையை அவர் நமக்கு அருளிச்செய்வார்.



# சபைக்கு ஆண்கள் அவசியம்


## Rev. T.R.ஜான் வின்ஸ்லி

Presbyter, Madurai South Section
Senior Pastor, Light House AG Church, Anupanadi


ஆண்கள் ஊழியத்தின் நோக்கம் ஆண்களை சபைக்கு கொண்டு வருவதல்ல; மாறாக சபையை ஆண்களிடத்தில் கொண்டு வருவதாகும். ஆண்கள் ஊழியம் என்பது ஆண் ஆதிக்கம் அல்ல; மாறாக, ஆண்கள் தங்களின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதாகும்.

**ஆண்களுக்கு சபை அவசியம்**

1. அதிகமாக குற்றங்கள் செய்து, தவறான பழக்கங்களுக்கு அடிமையாகி சிறைச்சாலைகளில் அடைக்கப்படுபவர்கள் ஆண்களே!
2. வேலையில் மரிப்பவர்களும், அதிக இருதய நோயாளிகளும், அதிகளவில் தற்கொலை செய்பவர்களும், பெண்களை விட பெரும்பாலும் குறைந்த வருடங்களே வாழ்பவர்களும் ஆண்களே!
3. அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகிறவர்கள் ஆண்களே!
4. அதிகமாக விவாகரத்து கோரி விண்ணப்பிக்கிறவர்களும், குடும்பம் உடைதலுக்கு காரணமாயிருப்பவர்களும் ஆண்களே!
5. குடும்பத்தில் சந்தோஷம் கெடுவதற்கு காரணம் என்று பிள்ளைகளால் குற்றஞ்சாட்டப்படுபவர்கள் ஆண்களே!
6. குடும்பத்தில் ஏழ்மைக்கு பிரதான காரணம் ஆண்களே!

இவையெல்லாவற்றையும் “இல்லை” என மறுத்து வாதிடலாம். ஆனால் நமது நோக்கம் அதுவல்ல. இவை பொதுவான நிலையில் உண்மையான கூற்றுகளே!

உலகப்பிரகாரமான ஆண்களோடு சபைக்கு வந்து ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபாடு காட்டும் ஆண்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கீழ்க்காண்பவை உண்மையென விளங்கும்.

1. குற்றங்கள் செய்வதும், பாவங்களுக்கு அடிமையாவதும் குறைகிறது, நாளடைவில் இல்லாமல் போகிறது.
2. குடும்ப உறவு வலுவடைகிறது, விவாகரத்துகள் இல்லாமல் போகிறது, குடும்பப் பொறுப்புகள் நிறைவேற்றப்படுகிறது.
3. மன உளைச்சல்கள் குறைந்து, பாவங்கள் குறைந்து திருப்தியான வாழ்க்கை வாழ்வதால் நோயற்ற நீண்ட நாள் வாழ்க்கை சாத்தியமாகிறது. மகிழ்ச்சியும், சுயமதிப்பும் உயருகிறது.
4. இவர்களுடைய பிள்ளைகள் தங்கள் தகப்பன்மார் தங்களோடு நேரம் செலவிடுவதாகவும், தங்களை பாராட்டுவதாகவும் பெருமிதப்படுகின்றனர்.

5. வேலை செய்வதாலும், வீண் செலவுகள் நீங்கியதாலும், குடும்ப பொருளாதாரம் அதிகரிக்கிறது. வறுமை நீங்குகிறது. சமுதாயத்தில் இவருடைய குடும்பம் தலைநிமிர்ந்து காணப்படுகிறது.

**சபைக்கு ஆண்கள் அவசியம்**

ஆண்களுக்கு சபை அவசியம், அதைவிட சபைக்கு ஆண்கள் அவசியம். ஒரு சராசரி சபையில் 60 சதவீதம் பெண்களும், 40 சதவீதம் ஆண்களும் காணப்படுகின்றனர். பிற மதங்களில் இப்படி இல்லை என்று கூறலாம். “இன்றைக்குள்ள சபைகள், சில ஆண் தளபதிகளால் நடத்தப்படும் பெண்களால் ஆன சேனையாக காணப்படுகிறது”.

1. ஆண்கள் துணிச்சல் உள்ளவர்கள், துடிப்பு மிக்கவராவார்கள்
2. ஆண்கள் ஒழுங்குகளையும், சட்ட திட்டங்களையும் மதிப்பவர்கள்.
3. ஆண்களிடத்தில் பெலன், ஆவிக்குரிய காரியங்கள் இரண்டையும் எதிர்பார்க்கலாம். பெண்களிடம் பொதுவாக ஆவிக்குரிய காரியங்களை மட்டுமே எதிர்பார்க்க முடியும்.
4. ஆண்கள் பொருளாதாரத்தைக் கொண்டு வருவார்கள்.
5. உற்சாகம் நிறைந்த ஆண்களால் நிறைந்த சபை ஆரோக்கியமுள்ள சபையாகவும், வளருகின்ற சபையாகவும் இருக்கும்.

**சபையில் ஆண்களின் (ஆண்கள் ஐக்கியத்தின்) ஊழியம்**

சபையை வெறுக்க அல்லது சபைக்கு வராமலிருக்க ஆண்களுக்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் சபைக்கு வருகிற ஆண்கள் சபையில் கர்த்தருக்கு செய்யக்கூடிய ஊழியங்கள் என்னவென்று பார்ப்போம். ஆண்களும், ஆண்கள் ஐக்கியமும் சபைக்கு எலும்புக்கூடு போன்றவர்கள். உடலின் மற்ற அனைத்து பாகங்களையும் தாங்கி நிற்பவர்கள். அப்போஸ்தலர்களும், சபைப் பிதாக்களும் ஆண்களே. மோசே தெரிந்து கொண்டவர்களும், அப்போஸ்தலர்கள் சபையின் பந்தி விசாரிப்புக்குத் தெரிந்து கொண்ட மூப்பர்களும் ஆண்களே!

## கீழ்க்காணும் ஊழியங்களில் புருஷர்கள் சபையில் ஊழியங்களைச் செய்யலாம்

**1. ஜெப ஊழியம் :**

ஜெப ஊழியத்தை பெண்களுக்கு குத்தகைக்குவிட்டது போன்ற சிந்தை நிலவுகிறது. ஜெபம் என்றால் பெண்களுக்குத்தான் ஆண்களுக்கு அல்ல என்பது மாயை. எருசலேமில் மேல் வீட்டில் (அப்போஸ்தலர் 1:13-15) 10 நாட்கள் ஜெபம் பண்ணினவர்களில் பெரும்பாலானோர் ஆண்களே.

புருஷர்களே! அதிகாலை ஜெபங்களில் பங்குபெறுங்கள். சங்கிலித் தொடர் ஜெபங்களை ஏற்படுத்தி ஜெபியுங்கள். 1 தீமோத்தேயு 2:8-ல் அப்போஸ்தலனாகிய பவுல், ‘அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன் என்று கூறுகிறார்.

**2. சுவிசேஷ ஊழியம் :**

‘‘சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்” அப்போஸ்தலர் 8:4. பெண்களைவிடவும் ஆண்களே சிறப்பாக

சுவிசேஷம் அறிவிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். சுவிசேஷ ஊழியம் செய்கிறவர்களில் பெரும்பாலானோரும், சிறப்பு பெயர் பெற்றவர்களும் ஆண்கள் தானே!.

புருஷர்களே! சுவிசேஷக் குழுக்களை ஏற்படுத்துங்கள். வாரம்தோறும் சுவிசேஷம் அறிவிக்கச் செல்லுங்கள். புதிதாக தொடங்கப்பட்ட சபைகளின் ஊழியர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் சென்று உதவி செய்யுங்கள். எப்படி சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்கிற பயிற்சி பெறுங்கள். 'நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15) என்கிற பரமனின் கட்டளைக்கு கீழ்ப்படியுங்கள்.

**3. சீஷத்துவ ஊழியம் :**

அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி தனது ஊழிய காலத்திலே ஏராளமான சீஷர்களை உருவாக்கினார். அவர்களே பிற்காலங்களில் சபைப் போதகர்களாகவும், சபைகளின் தலைவர்களாகவும், மிஷனரிகளாகவும், அப்போஸ்தலர்களாகவும், சுவிசேஷகர்களாகவும் மாறினார்கள். "ஆயினும் நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர் களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்" (கலாத்தியர் 2:2) என்று கூறுகிறார்.

புருஷர்களே! புதிய விசுவாசிகளாய் உங்கள் சபையில் வருகிற ஆண்களை பீச்சுக்கும், நீர் வீழ்ச்சிக்கும், ஷாப்பிங்குக்கும், விளையாட்டு மைதானங்களுக்கும் அழைத்துச் செல்லாமல் சபைக்கும், ஊழியங்களுக்கும் அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் கிறிஸ்துவின் நல்ல சீஷர்களாக உருவாக முன்மாதிரியாய் விளங்குங்கள். அவர்களுடைய விசுவாசம் வளருவதற்கு உதவி செய்யுங்கள். பின்மாற்றத்தில் இருக்கும் புருஷர்களை பலப்படுத்துங்கள். விசுவாசிகளான சகோதரிகளின் இரட்சிக்கப்படாத கணவன்மார்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்துங்கள்.

**4. சபை நிறுவுதல் :**

புறஜாதிய உலகில் யூதேயாவுக்கு வெளியே அந்தியோகியாவில் சபை நிறுவியது முழுநேர ஊழியக்காரர்கள் அல்ல. எருசலேம் உபத்திரவத்தில் சிதறிப்போன கிறிஸ்துவின் சீஷர்களான ஆண்களே நிறுவினர். ஏன், பெண்கள் அக்கூட்டத்தில் இல்லையா, என்று தர்க்கிக்கக் கூடும். பெரும்பாலானோர் ஆண்கள் என்பதினால் அவ்விதம் பதிவு செய்கிறேன் (அப்போஸ்தலர் 11:19-21) .

புருஷர்களே! உங்கள் சபைப் போதகரோடு இணைந்து கிளைச் சபைகளை நிறுவுங்கள். ஆராதனை ஸ்தலம் கண்டுபிடிக்க உதவுங்கள். கிளை சபைகள் ஆரம்பிக்கும் முயற்சிக்கு உங்கள் பொருளாதாரத்தைக் கொடுங்கள். கிராம வீட்டு சபை மூப்பர் பயிற்சியில் பங்குபெறுங்கள். முறையான கல்வி உங்கள் முயற்சிக்கு உதவி செய்யும். ஒருவேளை கர்த்தர் உங்களை முழுநேர ஊழியத்திற்கு அழைக்கக்கூடும். உங்கள் போதகரின் ஆலோசனை மற்றும் ஆசீர்வாதத்தோடு கர்த்தருக்கு சித்தமானால் நீங்களே கிளை சபையின் போதகராகவும் மாறக்கூடும்.

### 5. சபையில் உதவி ஊழியம் :

ஆதிசபையில் பந்திவிசாரிப்பு ஊழியம் செய்ய நற்சாட்சி பெற்ற ஏழு மூப்பர்களை ஏற்படுத்தினதைக் குறித்து அப்போஸ்தலர் 6:1-6 பகுதியில் வாசிக்கிறோம். ஏழுபேரும் ஆண்களே. உங்கள் சபைகளில் ஆவிக்குரிய மற்றும் ஆவிக்குரியதல்லாத எத்தனையோ காரியங்களில் உங்கள் உதவிகள் தேவைப்படுகிறது. அவற்றுள் சில...

- சபை வளாகம் சுத்தம் செய்தல்.
- வியாதியஸ்தர்களை சந்தித்தல்.
- சபையில் உள்ள முதியவர்களுக்கு உதவுதல்.
- விசுவாசிகளுக்கு அரசு உதவி பெற வழிகாட்டி உதவுதல்.
- உங்களுடைய திறமைகள், தாலந்துகளைக் கொண்டு உதவுதல். உதாரணம்: கம்ப்யூட்டர், பெயிண்டிங், தச்சு வேலை, கொத்தனார், எலக்ட்ரீசன், இன்னும் பல.
- சட்ட வழிகாட்டுதல்

### 6. சமுதாயத் தொடர்புகள் :

சபைக்கும், சமுதாயத்திற்கும் ஒரு பாலமாக புருஷர்கள் திகழவேண்டும். உங்கள் சமுதாய செல்வாக்குகள், சபையின் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும். உங்கள் பகுதி மக்கள் பிரதிநிதிகளான கவுன்சிலர்கள், மேயர், M.L.A, M.P, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், காவல்துறை ஆகியோருடன் சபையின் நன்மைக்காக பேச, செயல்பட புருஷர்கள் முன்வரவேண்டும்.

### 7. மிஷனரிப் பணி :

ஆதி சபையிலும், திருச்சபை சரித்திரத்திலும் மிஷனரிகளாகச் சென்றவர்கள் பெரும்பாலும் ஆண்களே (அப்போஸ்தலர் 13:1-3).

புருஷர்களே! மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள். மிஷனரிப் பணிக்கு உதாரத்துவமாகக் கொடுங்கள். மிஷனரிகளைத் தாங்குங்கள், ஒரு வாரம், இரண்டு வாரம், ஒரு மாதம் குறுகிய கால மிஷனரிப் பயணங்கள் செல்லுங்கள். மிஷனரிப் பணித்தளங்களில் ஆலய இடம் வாங்க, ஆலயம் கட்ட முன்வாருங்கள். தனிப்பட்ட நிலையிலும் சபையாகவும் இவைகளைத் திட்டமிட்டு செயல்படுத்துங்கள்.

**சர்வலோக சுவிசேஷ மயமாகுதலுக்கும்,**
**சர்வலோக எழுப்புதலுக்கும் புருஷர்களே திறவுகோல்!**
**புருஷர்கள் மாதிரளாக எழும்பாவிடில்**
**இவ்விரண்டும் வெறும் கனவே!**

---


## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# அடிமைத்தனத்தை மேற்கொள்ளுதல்

## (OVERCOMING ADDICTION)

Rev. K. ராஜா
இயக்குனர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், கல்வாரி ஏ.ஜி. சர்ச், கொடைக்கானல்

### I. அடிமைத்தனம் என்றால் என்ன? (WHAT IS ADDICTION)

...எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே (2பேதுரு 2:19).

... For a man is slave to whatever Mastered him ( II Peter 2:19)

- ஏன் செய்கிறோம் என்ற யோசனையில்லாமலேயே ஒரு காரியத்தை திரும்ப திரும்ப செய்வது.
- அதினால் நன்மை ஏதும் இல்லை, வாழ்க்கைக்கு தீமைதான் வருகிறது என்று தெரிந்தாலும் அந்த தவறையே மீண்டும் மீண்டும் செய்வது.
- அறியாமல் செய்த தவறை, அறிந்தே தொடர்ந்து செய்வது.

### II. அடிமைத்தனம் எப்படி வருகிறது? (HOW DOES ADDICTION COME?)

- பொதுவாகவே, நல்ல பழக்கமோ, கெட்ட பழக்கமோ தொடர்ந்து 20 நாட்கள் நம் வாழ்க்கையில் செய்து பழகிவிட்டால், 21-வது நாளில் நம்முடைய மனது அதைத் தேடுமாம்.
- அதே செயல் (பழக்கம்) இன்னும் சில நாட்கள் நம் வாழ்க்கையில் செய்து பழகிவிட்டால் நம்முடைய அன்றாட பழக்க வழக்கமாக மாறிவிடுகிறது.
- அடுத்த கொஞ்ச நாட்களில், அந்த பழக்கம் நமக்கு எஜமானாக மாறி, நம்மை அதின் இஷ்டத்திற்கு ஆட்டிப்படைக்க ஆரம்பிக்கும்.
- இன்னும் கொஞ்ச காலங்கள் ஆகும்போது, அது இல்லாமல் நம்மால் இருக்கவே முடியாது என்ற நிலை வந்துவிடும்.
- அதற்குப் பின்பு அந்த பழக்கத்திற்காக எதையும் செய்ய துணிந்துவிடும் நபராக மாறிவிடுகிறார்கள்.

இப்படித்தான் அடிமைத்தனம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் இடம்பிடித்து, ஆட்டிப்படைக்கிறது.

### III. அடிமைத்தனத்தின் அடையாளங்கள்:(SIGNS OF ADDICTION)

- தவறான பழக்கத்தை செய்யாமல் இருக்க முடியவில்லை. நிறுத்த முடியவில்லை என்கிற நிலை.
- எப்போதும் அதன் நினைவாகவே இருப்பது.
- தவறான பழக்கத்திற்காக வழக்கமான சில நல்ல பழக்கங்களையும் தியாகம் செய்வது.
- ரகசியமாக, யாருக்கும் தெரியாமல் தவறு செய்ய கவனமாயிருப்பது.
- தொடர்ந்து தவறு செய்வதற்காக பொய்சொல்வது.
- தவறான பழக்கத்தால், செயலால் எவ்வளவு நஷ்டம் வந்தாலும் அதைக் குறித்து கவலையில்லாமல் இருப்பது.

7. எவ்வளவு நேரத்தையும், பணத்தையும் அதற்காக செலவு செய்தாலும் திருப்தியற்று இருப்பது.

8. கடைசியாக அந்த பழக்கத்திற்கு அடிமைப்பட்டு சிக்கி இருந்தும், அடிமைப்பட்டிருக்கிறோம் என்பதை உணராமலிருப்பது.

அப்படியானால், இந்த அடிமைத்தனம் என்ற கொடூரப்பிடியில் இருந்து தப்பவே முடியாதா? அதை மேற்கொள்ளவே முடியாதா? என்றால் நிச்சயம் முடியும். அதை எப்படி மேற்கொள்ள முடியும் என்பதை பார்ப்போம்.

**IV. அடிமைத்தனத்தை மேற்கொள்தல்: (OVERCOMING ADDICTION)**

**முதலாவது நம்பிக்கை வையுங்கள்**

**i). தேவன் மேல் நம்பிக்கை:**

- யோவான் 16:33 – தேவன் உலகத்தை ஜெயித்தார்.
- 1 யோவான் 4:4–உலகத்திலிருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்.

**ii). உங்கள் மேல் நம்பிக்கை:**

- 1 யோவான் 5:4,5–இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

**இரண்டாவது தீர்மானம் எடுங்கள்:**

**WE ARE ADDICTED TO OUR THOUGHTS. WE CAN'T CHANGE ANYTHING IF WE CAN'T CHANGE OUR THINKING.**

- தேவனுடைய உதவியோடு ஒத்தாசையோடு அடிமைத்தனத்தை மேற்கொள்ளப்போகிறேன்.
- அடிமைப்படுத்தும் (Triggers) சூழ்நிலைகளை, நபர்களை, இடங்களை தவிர்க்கப்போகிறேன்.
- தீர்மானித்து செயல்படும்போது வருகிற சின்ன சின்ன தோல்விகளைக் கண்டு சோர்ந்து போகப் போவதில்லை.

**மூன்றாவது இணைத்துக் கொள்ளுங்கள்:**

- புதிய சூழ்நிலையோடு அதாவது ஆவிக்குரிய நல்ல நண்பர்களோடு உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.
- ஜெபம், வேதவாசிப்பு, ஆராதனை போன்ற காரியங்களில் தவறாமல் இணைத்துக் கொள்ளுங்கள்.

**நான்காவது முன்னேறிச் செல்லுங்கள்:**

- பிலி. 3:13,14 – இலக்கை நோக்கி தொடருங்கள்.
- எபிரெயர்12:1–இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுங்கள்.

“பாதி கடலை நீந்திக் கடந்த பிறகு முடியவில்லை என திரும்பி வருவதும், தொடர்ந்து நீந்தினால் திரும்பி வர நினைக்கும் அதே தூரத்தில் இலக்கை அடையலாம் என முன்னோக்கிச் செல்வதும் நம் முடிவில் தான் உள்ளது”

தொடர்ந்து முன்னேறுவோம்!

# பரிசுத்த ஆவியானவர்

## 1. பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள்

வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவருக்குக் குறிப்பிட்ட சிறப்பு அடையாளங்களை பயன்படுத்தினர். ஏனென்றால் அவைகள் பல வார்த்தைகள் சொல்வதைக் காட்டிலும் அவரைப்பற்றி அதிக விளக்கங்களைத் தருகிறது.

**1. அக்கினி** (அப்.2:3).

விசுவாசிகளின் வாழ்வில் சுத்திகரிக்கும் சக்தியையும் (வல்லமையையும் சொல்கிறது. (அப்.2:3; ஏசாயா 6:1-7). அக்கினி வெளிச்சம் காட்டுகிறது (சங்கீதம் 78:14).

**2. காற்று** (யோவான் 3:8)

காற்று அவரின் வல்லமையான புதுவாழ்வூட்டும் சக்தியைச் சொல்கிறது. காற்று அதன் விளைவுகளில் ஆற்றல்மிக்கதாயும், அதன் பலன்கள் பார்க்கக்கூடியதாகவும் இருக்கிறது.

**3. தண்ணீர்** (யோவான் 7:37-39)

தண்ணீர் ஆவிக்குரிய வாழ்க்கையில் விசுவாசிகள் நிரம்பி வழிய ஊற்றப்படுகிற அவரது வல்லமையைப் பற்றிப் பேசுகிறது (எபிரெயர் 10:22; சங்கீதம் 46:4).

**4. முத்திரை** (எபேசியர் 1:13).

விசுவாசிகளின் மேல் அவருக்குள்ள உரிமையைச் சொல்கிறது.

**5. எண்ணெய்** (அப்.10:38).

எண்ணெய் ஊழியத்திற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்ட அவரின் வல்லமையைச் சொல்கிறது. எண்ணெய் சுகமாக்குகிறது (வெளி.3:18). மட்டுமல்லாமல் ஆறுதல்படுத்துகிறது.

**6. புறா** (மாற்கு 1:10).

புறா, அவரின் கனிவான மென்மையான அமைதியான பண்பைச் சொல்கிறது.

## 1. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்

விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பின்வருமாறு கிரியை செய்கிறார்.

1. பாவத்தைக்குறித்து நம்மைக் கண்டித்து உணர்த்துகிறார் (யோவான் 16:9).
2. தேவ அன்பை நம்மில் ஊற்றுகிறார் (ரோமர் 5:5).
3. நமக்கு ஜெபிப்பதற்கு உதவி செய்கிறார் (ரோமர் 8:26; எபே.6:18; அப். 4:23,24).
4. விசுவாசிகளைப் புதிதாக்குகிறார் (யோ.3:5; தீத்து 3:5).
5. விசுவாசிகளுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 8:11; 1கொரி.6:19).
6. விசுவாசிகளை முத்திரை போடுகிறார் (எபே.1:13,14).
7. நம்மைஒன்றுபடுத்துகிறார்(1கொரி.12:13).
8. விசுவாசிகளை நிரப்புகிறார் (எபே.5:18).
9. சாட்சிகளாய் மாறுவதற்கு வல்லமையும், தைரியமும் தருகிறார் (அப்.1:8;4:31; 6:9;10).
10. விசுவாசிகளை வழிநடத்துகிறார் (ரோமர் 8:14)
11. விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்தளிக்கிறார் (1கொரி.12:1-11).
12. நம்மை ஆராதனை செய்ய வழிநடத்துகிறார்.
13. அவருடைய கனிகளை நம்மிலே வளரச் செய்கிறார்.
14. நம்மை ஆறுதல்படுத்தி, ஊக்குவிக்கிறார்.
15. கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை ஆர்வப்பட வைக்கிறார் (ரோமர் 8:23; வெளி.22:20).

## 3. ஆவியானவருக்கு விரோதமான பாவங்கள்

1. பரிசுத்த ஆவியை தூஷித்தல் (மத்.12:31,32).
2. பரிசுத்த ஆவியை எதிர்த்து நிற்பது (அப்.7:51).
3. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவது (எபே.4:30,32).
4. பரிசுத்த ஆவியை அவித்துப்போடுவது (1தெச.5:19).
5. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்வது (அப்.5:3)

## 4. பரிசுத்த ஆவியின் கனிகள்

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22,23)

## 6. பரிசுத்த ஆவியின் வரங்கள் (1கொரி.12:8-10)

1. ஞானத்தைப் போதிக்கும் வரம்.
2. அறிவை உணர்த்தும் வரம்.
3. விசுவாசம்.
4. குணமாக்கும் வரம்.
5. அற்புதங்களைச் செய்யும் வரம்.
6. தீர்க்க தரிசனம் உரைக்கும் வரம்.
7. ஆவிகளைப் பகுத்தறியும் வரம்.
8. பற்பல பாஷைகளைப் பேசும் வரம்.
9. பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம். வாசிக்கவும் : மாற்கு 16:17-18; ரோமர் 12:6-8; எபேசியர் 4:8-13; 1பேதுரு 4:10-11).



தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# அழிவிலிருந்து காக்கப்பட....

Rev. S. தாமரை செல்வன்
இயக்குநர், வடமேற்கு மிஷனரி ஊழியங்கள்

கிறிஸ்துவுக்குள் என் அன்புக்குரியவர்களே,

எங்கள் வடமேற்கு மிஷன் இலக்கத்தின் சார்பில் தேவன் கிருபையும் சமாதானமும் பெருக வாழ்த்துகிறோம்.

அழிவிலிருந்து காக்கப்பட்டவர்கள் யார்? என்றும், அழிவிலிருந்து காக்கப்பட நாம் என்ன செய்ய வேணடும்? என்பதையும் இங்கே ஆராய்வோம்.

**நோவாவின் நாட்களில்:** (ஆதி. 7 அதிகாரம்)

நோவாவின் நாட்களில் ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானபோது தேவனின் வார்த்தையைக் கேட்டு அதன்படி செய்த பேழையில் நோவாவும் அவரது மனைவி, மூன்று மகன்கள் மூன்று மருமக்கமார்கள் மொத்தம் எட்டுபேரும் மற்றும் அவரோடு பேழைக்குள் கடந்து வந்த சகலவித மாம்ச ஜந்துக்களாகிய ஜோடு ஜோடான பறவைகள், மிருக ஜீவன்கள், பூமியின் மேல் ஊருகிற சகல பிராணிகள் மட்டும் அழிவிலிருந்து காக்கப்பட்டார்கள்.

பேழைக்கு வெளியே பூமி முழுவதிலும் இருந்த மனுஷர் முதல் மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும், பூமியின் மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராதபடி நிக்கிரகமாயின (ஆதி.7:23).

**அழிவிலிருந்து காக்கப்பட்ட நோவாவுடன் தேவனின் உடன்படிக்கை**

கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை.... இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை.

பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார் (ஆதி. 8 : 21,22).

இக்காலத்தில் பாவத்திலும் சாபத்திலும் வாழ்ந்து ஆத்துமாவில் மரித்த உங்களையும் என்னையும் தேவன் தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பிராயச்சித்த பலியினால் அழிவிலிருந்து காத்திருக்கிறார். அழிவிலிருந்து காக்கப்பட்ட நமக்கு தேவன் சொல்லும் காரியம் விதைப்பும் அறுப்பும் பூமியுள்ள நாளளவும் ஒழிவதில்லை என்கிறதின் பொருள் தொடர்ந்து நாம் செய்யும் செயல்கள் (வாஞ்சை அதற்காக செயல்படும் பிராயசங்கள்) ஒழிவதில்லை. ஒழியக்கூடாது என்கிறார்.

**விதைப்பும் அறுப்பும் நடைபெறாவிட்டால்:**

ஆகாரம் கிடைக்காது. இருக்கிறவைகளை புசிப்போம் குடிப்போம். ஒரு நாள் இருந்ததெல்லாம் தீர்ந்தபின் ஆகாரம் இருக்காது. பஞ்சம் உண்டாகும். அழிவு வரும். ஜலப்பிரளயத்தினால் வந்த அழிவு அல்ல. பஞ்சத்தினால் வரும் அழிவு.

**ஈசாக்கின் நாட்களில்: ( ஆதி. 26 அதிகாரம்)**

ஆபிரகாமின் நாட்களில் உண்டான பஞ்சத்தை அல்லாமல், பின்னும் ஒரு பஞ்சம் தேசத்தில் உண்டாயிற்று. கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி “நீ எகிப்திற்கு போகாமல் இந்த தேசத்திலே வாசம்பண்ணு, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன்” என்றார்.

ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான். பஞ்சத்தில் விதைப்பது, முதலீடு செய்வது, பிரயாசப்படுவது, வாஞ்சிப்பது என்பது சிந்திக்க முடியாத கடினமான காரியம். சவாலான காரியம். ஆனாலும் ஈசாக்கு விதைத்தான். வாஞ்சித்தான். முதலீடு செய்தான். பிரயாசப்பட்டான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். நூறு மடங்கு பலன் அடைந்தான்.

**இரு வகையான விதைப்பு:**

பவுல் இதைக் குறித்து “மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்” என்கிறார் (கலாத்தியர் 6:7,8).

**1. மாம்சத்திற்கென்று விதைப்பது:**

அழிந்து போகின்ற காரியங்களை வாஞ்சிப்பது. அதை அடைவதற்கு முயற்சி எடுப்பது. அதற்காக பிரயாசப்படுவது. அதை அடைவதே சாதனை என நினைப்பது. சாதனை என்று மார்பு தட்டிக்கொள்வது. முடிவு இவ்வுலக வாழ்வோடு முடிந்துவிடும். அழிந்து போகும்.

**2. ஆவிக்கென்று விதைப்பது:**

அழிவுள்ள வாழ்க்கையில் விதைப்பின் காலத்தில் அழியாத, நிலைநிற்கிற காரியங்களை வாஞ்சிப்பது. முயற்சி எடுப்பது. முதலீடு செய்வது. பிரயாசப்படுவது கடினமாக உழைப்பது, பொறுமையுடன் காத்திருப்பது. அறுவடையின் காலத்தில் தீவிரமாய் செயல்படுவது.

தேவன் மிகுந்த பலனைத் தருவார். சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் என பவுல் (2 கொரிந்தியர் 5:10) கூறுகிறார்.

**தமிழ்நாட்டில் .....**

தமிழ்நாட்டில் விதைத்தவர்கள் (பிரயாசப்பட்டவர்கள்) ஏராளமானவர்கள் உண்டு. இருவரை மட்டும் இப்போது பட்டியலிடுகிறேன்.

**1. டாக்டர். ஐடா எஸ். ஸ்கடர்:**

1900-ம் ஆண்டில் ஒரு அமெரிக்க மிஷனெரி டாக்டர். ஐடா எஸ். ஸ்கடர் தன் தோழி ஆனிஹான்காக்டேன் என்பவருடன் தமிழகம் வந்து வேலூரில் பெண்களுக்கென மருத்துவ பணியை ஆரம்பித்து 40 படுக்கை வசதியுடன் மருத்துவமனையை ஆரம்பித்தார். 1908-ல் 5 மாணவிகளுடன் செவிலியர்

பயிற்சி பள்ளியை தொடங்கினார். 1913-ல் மருத்துவ கல்லூரியை 200 ஏக்கர் நிலத்தில் துவக்கினார். 1960 மே 24-ல் தன் 90வது வயதில் ஓட்டத்தை முடித்தார். அவரின் செயல்பாடு இன்று தெற்காசியா முழுவதிற்கும் பல கோடி ஜனங்களின் சரீர சுகவாழ்வு பெறும் மையமாக செயல்பட்டு வருகிறது. என்றோ ஒருவர் விதைத்தது முதலீடாக தன்னை அர்ப்பணித்தது இன்றளவும் பலகோடி ஜனங்களில் சரீர சுகவாழ்வுக்குரியதாயிருக்கிறது.

**2. பர்த்தலோமேயு சீகன்பால்க்:**

ஜெர்மானிய நாட்டை சேர்ந்தவர் 1706-ஆம் ஆண்டு ஜுலை 9 ஆம் நாள் தமிழ்நாட்டில் தரங்கம்பாடிக்கு வந்து ஒரு முதிய புலவரிடம் தமிழ்மொழி படித்தார். 5000 வார்த்தைகளை மனப்பாடம் செய்தார். கடற்கரை மணலில் விரலால் எழுதி தமிழ் எழுத்துக்களை பழகினார். தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்று தமிழைத் தன் மொழிபோல் கற்றுக்கொண்டு 1708 அக்டோபர் 17-ல் புதிய ஏற்பாட்டை தமிழில் மொழிபெயர்க்க துவங்கி 1711 மார்ச் 11-ல் முடித்தார். 1715 ஜுலை 15-ல் முதன் முதலில் தமிழ் புதிய ஏற்பாட்டை அச்சிட்டு வெளியிட்டார். 23 பிப்ரவரி 1719-ல் தனது 37வது வயதில் ஓட்டத்தை முடித்தார்.

தமிழ் மொழியில் வேதாகமம் மொழிபெயர்க்கப்படவும் அச்சிடப்படவும் தன் வாழ்நாள் முழுவதையும் விதையாய் விதைத்தார். அதுதான் இன்று வரை நம் கைகளில் தேவனின் அரிய வார்த்தைகள், வெளிப்பாடுகள் உள்ள வேதாகமம் நம் மொழியில் பெரிய சொத்தாக கிடைத்துள்ளது.

யாரோ ஒருவர் அழியாத நித்திய வாழ்வுக்காக தன் வாழ்நாளில் செயல்பட்டதின் விளைவு இன்றும் என்றும் அழியாசொத்தாக தமிழ்மொழி வேதாகமம் விளங்குகிறதே.

ஒவ்வொரு காலத்திற்கும் தேவனுக்காக தேவராஜ்யத்திற்காக அழிக்கின்ற ஆத்துமாக்களின் மீட்பிற்காக தங்களையே விதைகளாக அர்ப்பணித்தவர்கள் செயல்பட்டவர்கள் மூலமாய்தான் நாம் இந்த அளவிற்கு தேவ ஆசீர்வாதம் பெற்று இருக்கிறோம்.

**நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள்?**

1. செயல்பட வாஞ்சிக்கிறீர்களா?
2. அதற்காக பாரத்தோடே ஜெபிப்பீர்களா?
3. தெளிவான திட்டவட்ட செயல்களில் உங்களை முதலீடாக அர்ப்பணிப்பீர்களா?
4. இந்த தலைமுறைக்கும் பின்வரும் தலைமுறைகளுக்கும் நிலையான அழியாத சொத்துக்களை வைத்துவிட்டு செல்வீர்களா?

**வட மாநிலங்களில்... இன்னும்...**

1. மாவட்டங்களில், மாவட்ட தலைநகரங்களில்கூட ஊழியங்கள், ஊழியர்கள் இல்லாத நிலை இருக்கின்றதே...
2. இருக்கின்ற ஊழியங்களுக்கு ஊழியர் குடும்பங்களுக்கு தேவைகள் ஏராளம் இருக்கின்றதே ...

3. இன்னும் ஏராளமான மொழிகளில் நம் வேதாகமம் மொழிபெயர்க்கப்படாமல் தங்கள் சொந்த மொழியில் வேதாகமம் கிடைக்காத ஜனங்கள் இருக்கிறார்களே...

4. சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத மக்கள் இனங்கள் 2500க்கும் அதிகமான இருக்கின்றதே...

**நம்மில்.......**

இதை சிந்திப்பார் யார்?
இவர்களுக்காக உத்திரவாதம் செய்வார் யார்?
தங்கள் வாழ்வை முதலீடு செய்வார் யார்?

**நீங்கள்........**

எந்த விதத்தினாலாவது தேவனுடைய ராஜ்யத்தின் பணியில் செயல்பட விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். தேவன் உங்களை இம்மைக்கும் மறுமைக்கும் இந்த தலைமுறைக்கும் இனிமேல் வரப்போகும் தலைமுறைகளுக்கும் ஆசீர்வாதமாக வைப்பாராக... ஆமென்...

**தொடர்புக்கு:**


சங்கை. எஸ்.தாமரைச்செல்வன் - 94439 77272
சங்கை. வி.லாரன்ஸ் மனோஜ்குமார் - 94434 52954



## தாய்மார்கள் தினம்

மே 08, ஞாயிறு




## தகப்பனார்கள் தினம்

ஜீன் 19, ஞாயிறு




தமழ பரதேசததலுளள அனைத்து தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்




## பெந்தெகொஸ்தே நாள்

ஜீன் 05, ஞாயிறு

திருச்சபை விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொண்டு தேவனுக்காக பிரகாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்



# கனி கொடுங்கள்

Rev. V.J. பாலஸ்
தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

யோவான் 15:1-2 "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்".

நமக்கு கனி கொடுக்கிற அனுபவம் இருக்க வேண்டும். நாம் ஒரு செடியை வைப்போமானால் அது குறித்த காலத்தில் கனி கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதுபோலதான் நம்மை இரட்சித்த ஆண்டவரும் அவருக்காக இந்த உலகத்தில் நாம் கனி கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார். தோட்டத்திலே சில கொடிகள் செடியிலிருந்து பிரிந்து விடும்போது அது கனி கொடுக்காமல் அது காய்ந்து அழிந்து விடும் காரணமென்னவென்றால் அந்த கொடிகள் செடியில் நிலைத்திருப்பதில்லை. அதனால் அதற்கு கிடைக்க வேண்டிய நீரும் தேவையான சத்துக்களும் கிடைப்பதில்லை. அதுபோல நாம் ஆண்டவருக்கென்று கனி கொடுக்க வேண்டுமானால் செடியாகிய அவரில் நிலைத்திருக்க வேண்டும். யோவான் சுவிசேஷத்தில் இந்த 15 அதிகாரம் முழுவதும் வாசித்துப் பார்க்கும்போது ஆண்டவர் இந்த கனி கொடுக்கிற அனுபவத்தைதான் முக்கியப்படுத்தி பேசுகிறார்.

### கனிகொடுப்பதால் நாம் பெறும் ஆசீர்வாதங்கள்

இந்த அதிகாரத்தின் 16-ஆம் வசனத்தைப் பார்க்கும்போது நாம் ஆண்டவரைத் தெரிந்துகொள்ளவில்லை. ஆண்டவரே நம்மை தெரிந்துகொண்டார். ஏனென்றால் நாம் ஆசீர்வாதத்தை பெற வேண்டும் என்பதற்காகத்தான். நமக்கு எது தேவையோ அதை ஆண்டவரிடத்திலிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் கேட்கிற அனைத்து ஆசீர்வாதங்களையும் தருவேன் என்று இந்த வசனத்தில் வாக்கு கொடுத்திருக்கிறார். அதற்கு நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் நாம் அவருக்காக நிரந்தரமாக எப்பொழுதும் கனிகொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் ஆண்டவருக்கென்று கனிகொடுக்க வேண்டுமானால் அவரில் நிலைத்திருக்க வேண்டும். இதைத்தான் இந்த அதிகாரத்தின் 7வது வசனத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

### கனிகொடாதவர்களின் நிலை

எதற்கும் உதவாத காட்டுச் செடியாக இருந்த நம்மை ஆண்டவர் இரட்சித்து சபை என்னும் தோட்டத்தில் நட்டு வைத்திருக்கிறார். நாம் சபையில் பிரயோஜனமாக இருக்க வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார். லூக்கா 13-ஆம் அதிகாரத்தில் 6 முதல் 9 வரையுள்ள வசனங்களை பார்க்கும்போது அங்கே ஒருவன் தன்னுடைய திராட்சை தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டு வைத்திருக்கிறான். அவன் அந்த தோட்டத்தில் வந்து அந்த அத்தி மரத்தைப் பார்க்கும்போது அதில் கனியேதுமில்லை. அப்போது தோட்டக்காரன் அந்த ஊழியக்காரனைப் பார்த்து நான் இதில் 3 வருடமாக கனியைத் தேடி வருகிறேன். இதுவரை எந்த கனியுமில்லை ஆகவே இதனை வெட்டிப்போடு, இது நிலத்தையும் கெடுக்கிறது என்று சொன்னான். அந்த தோட்டத்தில்

வேலை செய்த ஊழியக்காரன் தன் எஜமானை நோக்கி, எஜமானே இந்த ஒரு வருடம் பார்ப்போம். இதைச் சுற்றி கொத்தி எரு போட்டு தண்ணீர் ஊற்றுகிறேன். அதற்கு பின்பும் கனி கொடுக்காவிட்டால் இதனை வெட்டிப் போடலாம் என்கிறான். இது போலதான் இன்றைக்கு ஊழியக்காரர்கள்; செயல்படாத சபையிலுள்ள விசுவாசிகளுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். விசுவாசிகள் தவறு செய்யும் போதும், தேவனுக்கு விரோதமாக பேசும்போதும், தேவனை விட்டு தூரமாக போகும்போதும் தேவனிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

## கனிகொடாதவர்களின் முடிவு

ஆண்டவர் ஓசியா மூலமாக இஸ்ரவேலரைக் குறித்துச் சொல்லும்போது இஸ்ரவேல் பலனற்ற திராட்சை செடி அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது. என்று சொன்னார். உனக்காகவும் உன் குடும்பத்திற்காகவும் மட்டும் நீ வாழ்கிறாயா? அல்லது ஆண்டவருக்காக நீ வாழ்கிறாயா? தேவனுடைய ராஜ்யம் கட்டப்படவேண்டும். அழிந்து போகிற ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவேண்டும். அதற்காக நீ என்ன செய்கிறாய்? சபையின் வளர்ச்சிக்காக நீ பாடுபடுகிறாயா? அதுதான் மிக முக்கியமான காரியம். இன்றைக்கு அநேக விசுவாசிகளுக்குள்ளாக சுயம் இருக்கிறது. மற்றவர்களைக் குறித்து கவலைப்படமாட்டார்கள். மற்றவர்களின் தேவையைக் குறித்து கவலைப்படமாட்டார்கள். யார் எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்று சுயநலமாக வாழ்வார்கள். இதை வாசிக்கிற நீங்கள் உங்களைக்குறித்து யோசித்துப்பாருங்கள் நீங்கள் மற்றவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கிறீர்களா? சபையில் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறீர்களா? சபையின் வளர்ச்சிக்காக நீங்கள் பாடுபடுகிறீர்களா? புதிய ஆத்துமாக்களை நீங்கள் ஆதாயம் செய்கிறீர்களா? மற்றவர்கள் சபைக்கு வந்தால் என்ன வராவிட்டால் என்ன அதைக் குறித்து எந்த கவலையும்படாமல் இருக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு போவது கடினம். அவர்கள் இரட்சிக்கப்படாவிட்டால் அவர்கள் பாதாளத்திற்கு சென்றுவிடுகிறார்கள். நீங்களும் தேவனுடைய சித்தம் செய்யாதபடியினால் நீங்களும் அந்த பாதாளத்திற்கு தப்ப முடியாது.

## கனி கொடுப்பதற்கு உங்களை நம்பியிருக்கும் ஆண்டவர்

லூக்கா 16 ஆம் அதிகாரத்தில் 19 முதல் 31 வரையுள்ள வசனங்களைப் பார்க்கும்போது ஆண்டவர் அங்கே யாருக்கும் பிரயோஜனமில்லாமல் சுயநலமாக வாழ்ந்த ஐசுவரியவானைப் பற்றி பேசுகிறார். அந்த ஐசுவரியவான் சம்பிரமமாக வாழ்ந்து பாதாளத்தில் விழுந்து விடுகிறான். அவன் பாதாளத்தில் வேதனைப்படும்போது அவன் பூமியிலே எனக்கு ஐந்து சகோதரருண்டு. அவர்களுக்கு இந்த செய்தியை அறிவிக்கும்படி என்னை அனுப்ப வேண்டும் என்று சொன்னான். ஆனால் ஆண்டவர் அவனைப்பார்த்து பூமியிலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். அவர்கள் வார்த்தையை நம்பாமல் போனால் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து சென்றாலும் நம்ப மாட்டார்கள் என்று சொல்கிறார். ஆகவே ஆண்டவர் இப்படி தம்மை அறியாமல் வாழ்கிற ஜனங்களை இரட்சிப்பதற்கு தேவனை அறிந்திருக்கிற நம்மையே நம்பி இருக்கிறார். ஆகவே இந்த பூமியிலே வாழ்கிற ஜனங்களுக்கு நாம் உத்தரவாதம் செய்ய வேண்டும். நம்முடைய பொறுப்பை நாம் உணர வேண்டும். நம்முடைய சுயநலமான வாழ்க்கையை விடுத்து அழிவுக்கு நேராக சென்றுகொண்டிருக்கிற ஜனங்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசி அவர்களுக்கு நற்செய்தி அறிவித்து அவர்களை இரட்சிப்புக்கு நேராக வழி நடத்த வேண்டும். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து உங்களை தமக்கென்று கனிகொடுக்கிறவர்களாக மாற்றுவாராக, ஆமென்.



தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

# ஜீவ பலியாய்


**Rev. D. சாலமோன்**

President, Christ Ambassadors


உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை - ரோமர் 12:1,2. பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட பலிகள் நிரந்தர தீர்வு தராத நிலையில், மனுஷகுமாரனும் தேவ குமாரனுமான இயேசு கிறிஸ்து மாம்சமும் இரத்தமும் உடைய மனிதனாய் மனுக்குலத்தை மீட்க இந்த பூமிக்கு வந்து தன்னையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து மேன்மையான பாவமன்னிப்பாகிய மீட்பை நமக்கு பெற்றுத் தந்தார்.

பழைய ஏற்பாட்டு பலிகள் செத்தவைகள். புதிய ஏற்பாட்டு பலி ஜீவனுள்ள பலி. பாவங்களினால் மரித்த நம்மை ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்ப்பிக்கிறார். அந்த உயிர்மீட்சியை அனுபவிக்க நம்முடைய சரீரங்களை ஜீவபலியாய் ஒப்புக்கொடுக்க வேண்டுகிறார்.

### 1.உங்கள் சரீரங்களை ஜீவ பலியாய் ஒப்புக் கொடுங்கள்

பழைய ஏற்பாட்டில் ஈசாக்கு, இயேசு கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக இருக்கிறார். விருப்பத்தோடு தன்னை பலியாக அர்ப்பணித்த ஈசாக்கை தேவன் சாக விடவில்லை. அவன் மரிக்க வேண்டிய இடத்தில் ஓர் ஆடு பலியிடப்பட்டது. நாம் சாகவேண்டிய இடத்தில் இயேசு மரித்தார். இதே சரீரத்தில் தான் பாவ உணர்வு வருகிறது. ஆனால் இதே சரீரத்தை தான் தேவன் தமது ஆலயமாக மாற்றி இருக்கிறார். 1கொரிந்தியர் 6: 19, 20-ல் உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே... என்று வாசிக்கிறோம். இந்த சரீரத்திலே ஆவியானவர் தங்கியிருக்கிறபடியால் அதை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

தேவன் கிருபையைக் கொடுத்து பாவத்தை ஜெயிக்க நம்மை பெலப்படுத்துகிறார். கிருபை என்பது பாவம் செய்வதற்கான அனுமதி அல்ல, மாறாக பாவத்தை ஜெயிக்க தேவன் கொடுக்கும் பெலன். Grace of God is not licence to sin, but power of God to overcome sin. பாவத்துக்கும் பரிசுத்தத்துக்கும், எல்லையே கிடையாது. பாவம் கீழான பாதாளத்தை நோக்கி சென்று கொண்டே இருக்கும். பரிசுத்தம் மேல் நோக்கி சென்று கொண்டே இருக்கும். நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்று முடிவு செய்து கொள்ளுங்கள். பிலிப்பியர் 1:20-ல் நான் ஒன்றிலும் வெட்கப்பட்டு போகாமல் ...கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார் என்று... நமது சரீரத்தில் ஆவியானவர் வாழ்வது மட்டுமல்ல மகிமைப்படுகிறார் (2 கொரி. 4:7). மாத்திரமல்ல நீதியின் அவயவமாக மாற்றுகிறார். உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள் என்று கூறுகிறார் (ரோமர் 6:13). கட்டாயமாக, வெறுப்பாக, பயந்து அல்ல; ஈசாக்கு, இயேசுவைப் போல விருப்பத்தோடு உன் சரீரத்தை ஆண்டவருக்கு

ஒப்புக்கொடுத்தால் அவர் நம் சரீரத்தின் மூலம் மகிமைப்படுவார். நம்முடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

## 2.சிந்தையை ஜீவ பலியாய் ஒப்புக் கொடுங்கள்

இந்த உலகம் நம் சிந்தையை கட்டுப்படுத்துகிறது. வெளியிலிருந்து வருகிற தாக்கத்தின் மூலமாக கட்டுப்படுத்துகிறது. ஆனால் கர்த்தரோ நமக்குள்ளே ஒரு ஆற்றலை வைக்கிறார். நமக்குள்ளே வசிக்கிற பரிசுத்த ஆவியானவர் தேவ வசனத்தை வாசிக்கும்போது நம் மனதைப் புதிதாக்குகிறார். நமக்குள் மாற்றம் வருகிறது. இயேசு ஜெபம் பண்ணும்போது மறுரூப மலையில் அவருடைய முகரூபம் மாறியது (மத்தேயு 17:1). அவருக்குள் மறுரூபம் வந்தது. நமக்குள்ளே நம் சிந்தனை மாறும்போது நமக்கும் ஆண்டவருக்கும் உள்ள உறவிலே மறுரூபம் சாத்தியமாகும்.

ஒரு சிந்தனையை விதைத்தால் அதன் பலனாக ஒரு செயலை அறுப்பாய். நல்ல செயலை விதைத்தால் நல்ல பழக்கவழக்கங்களை அறுப்போம். நல்ல பழக்க வழக்கங்களை விதைத்தால் நல்ல குணத்தை அறுப்போம். நல்ல குணத்தை விதைத்தால் நித்திய பலனை அறுப்போம்.

வயிற்றுக்கு பசி எடுப்பதை போல நமது மூளைக்கும் பசி எடுக்கும். காலை எழுந்தவுடன் வேதத்தை வாசித்து ஞானத்தை, அறிவை, நல்ல தகவல்களை கொடுக்கும்போது, நாள் முழுவதும் திருப்தியாக இருக்கும். அந்த மூளைக்கு சரியான போஷாக்காகிய ஞானம், அறிவு போகவில்லை என்றால் அது வேறு எதையாவது தேடும். அதனால்தான் ஆண்டவர் வழியிலே நின்று பேதையாய் இருப்பவன் எவனோ அவன் என்னிடத்தில் வந்து ஞானத்தை கற்றுக்கொள் என்கிறார் (நீதி.8:1,5). அதனால்தான் காலைதோறும் கர்த்தரின் கிருபை புதிதாய் இருக்கிறது. அந்த சிந்தையை ஞானத்தாலும், வசனத்தாலும் அவர் மறுரூபப்படுத்துகிறார்.

## 3.சுய சித்தத்தை ஜீவபலியாய் ஒப்புக்கொடுங்கள்

சித்தம் என்பது ஒரு செயலை செய்யலாமா? செய்ய வேண்டாமா? என்று சிந்தித்து, செயல்படுவது. இன்று நம்மை சுற்றி இருக்கிற கலாச்சாரமானது தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணமில்லாமல் பாவத்தை சந்தோஷமாக செய்யத்தூண்டுகிறது, நமது சவால்கள் இவைகளே.

ஒரு தவளையை தண்ணீர் நிறைந்த பாத்திரத்தில் போட்டு சூடுப்படுத்தப்பட்டது, ஒரு குறிப்பிட்ட அளவு சூட்டை தாங்கிகொண்ட தவளையானது, ஆபத்தை உணர்ந்து, வெளியே குதித்தது. இயேசுவை விசுவாசிக்கும் வாலிபரே! சாத்தானும் நம்மை சிறிது சிறிதாக தான் பாவத்திற்குள் இழுத்துச் செல்கிறான். அந்ததவளையைப் போல ஆபத்தை உணர்ந்து தேவனைச் சார்ந்து தப்பித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சித்தம் ஆண்டவருடைய சித்தத்துக்கு இணையாக இருக்க வேண்டும். என் சித்தமல்ல; உம் சித்தம் ஆண்டவரே! என்று இயேசு ஜெபித்தது போல நாமும் ஜெபித்து ஜெயம் பெறுவோம்.

புத்தியுள்ள ஆராதனையாய் ஜீவ பலியாக நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, தேவ சித்தம் செய்து, அவரை மகிமைப்படுத்துவோமாக! ஆமென்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20


ஹாய் குட்டீஸ் எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கடந்த மாத இதழில் வெளியான சிறுவர் கதையை வாசித்து பலர் உங்கள் கருத்துக்களை தெரியப்படுத்தினீர்கள். அவைகளுக்காக தேவனை துதிக்கிறேன். இந்த மாதமும் நன்னெறி கருத்தோடு கூடிய சுவாரசியமான கதை கூற விரும்புகிறேன். கதை கேட்க ஆயத்தமா? வாங்க போகலாம்...

ஒரு எலிக்கூட்டம் உணவு தேடிப் புறப்பட்டது. அவற்றின் தலைவன் ஒவ்வொரு இடமாக மோப்பம் பிடித்தபடி அவற்றை வழி நடத்திச் சென்றது. வழியில் ஒரு வீட்டின் அறை ஒன்றிலிருந்து அருமையான பலகார வாசனை அதன் கவனத்தை இழுத்தது. தன் கூட்டத்தாருடன் கவனமாய் உள்ளே சென்றது.

ஆஹா! அங்கே ஒரு மூடப்படாத பெரிய ஜாடிக்குள் நெய்யில் சுட்ட அதிரசங்கள் இருந்தன. "இன்னிக்கு நல்ல வேட்டைதான்", உற்சாகமாய் ஜாடிக்குள் குதிக்கும்போது தலைவன் எலி சொன்னது "நண்பர்களே! இது புதிய இடம். எங்கிருந்து என்ன ஆபத்து வருமென்பது நமக்குத் தெரியாது. எனவே உங்கள் பசிக்குத் தேவையானதை மாத்திரம் சாப்பிட்டு விட்டு உடனடியாய் இங்கிருந்து சென்று விடும் வழியைப் பாருங்கள்" என்றது.

தலைவன் சொன்னதுடன் நிற்காமல், அவசரமாகக் கொஞ்சம் மட்டும் சாப்பிட்டு விட்டு ஜாடிக்கு வெளியே வந்து காவலுக்கு நின்றது. ஆனால் மற்ற எலிகளோ தலைவன் சொன்னதை மறந்து நெய் அதிரசங்களை ஒரு கை பார்க்கத் தொடங்கின. தலைவன் சொன்னது , "நண்பர்களே! தூரத்தில் மனித வாடை தெரிகிறது. உடனே கிளம்புங்கள்". ஜாடிக்குள்ளிருந்து, "இதோ தலைவா!" பதில் மட்டும் வந்தது. எலிகள் வரவில்லை.

மீண்டும் தலைவன் சொன்னது, "நண்பர்களே! மனிதக் காலடி ஓசைகள் நெருங்கி வருகின்றன. உடனே வெளியே வாருங்கள்". இம்முறை அதிரசத்தின் சுவையில் மெய்மறந்து போயிருந்த எலிகள், "ம்... ம்..." என்று மட்டும் சொல்லிவிட்டு இன்னும் வயிறு முட்ட அதிரசத்தைத் தின்றன.

இப்போது தலைவன் கத்தியது, "முட்டாள்களே! இதோ ஒரு மனிதன் உள்ளே வந்து விட்டான். இனி நான் இங்கிருந்தால் என்னைக் கொன்று விடுவான். உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பாதுகாப்பான இடம் தேடி ஓடிப்போனது. பிரச்சனையின் தீவிரத்தை அப்போதுதான் புரிந்து கொண்ட எலிகள் ஜாடியிலிருந்து வெளியேற முயன்றன. ஆனால் பாவம் ஆழமான ஜாடியிலிருந்த அதிரசங்கள் தீர்ந்ததால் அது மேலும் ஆழமாகி விட்டதாலும், வயிறு முழுக்க அதிரசம் நிரம்பி இருந்ததாலும் அவற்றால் தாவி வெளியே வர இயலவில்லை.

கோபத்துடன் வந்த மனிதனிடம் எலிக்கூட்டம் சிக்கிக் கொண்டன. தன் கூட்டத்திலிருந்த எலிகள் ஒவ்வொன்றாக அடித்துக் கொல்லப்படுவதை ஒரு பொந்திலிருந்து பார்த்து தலைவன் எலி கண்ணீர் விட்டது.

அன்பு தம்பி தங்காய், பல தருணங்களில் நாமும் இப்படிதான் சிக்கி கொள்கிறோம். பெற்றோர், பெரியோர், ஆசிரியர், போதகர் என பலர் வாயிலாக நமக்கு கிடைக்கும் எச்சரிப்புகளுக்கு நாம் கீழ்ப்படிய தவறும்போது ஆபத்தில் சிக்கிகொள்ளும் அபாயம் இருக்கிறது.

உன் பெற்றோருக்கு உன்னைப்போல ஆங்கிலம் பேச தெரியாதவர்களாக இருக்கலாம். உன்னைப்போல ஸ்மார்ட்டா சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கலாம். நீ எதிர்பார்க்கும் அழகு, பணம், புகழ் எதுவுமே இல்லாமலிருக்கலாம். ஆனால் அவர்களிடம் நீண்ட நெடிய அனுபவம் இருக்கிறது. உன்னைப் பற்றிய உண்மையான அக்கறை இருக்கிறது. ஆகவே தான் வேதாகமம் பெற்றோருக்கு கீழ்ப்படிய கற்றுக்கொடுக்கிறது.

“வழியை விட்டு விலகுகிறவனுக்குப் புத்திமதி விசனமாயிருக்கும்; கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவன் சாவான்” (நீதி 15:10).

மேற்கண்ட வசனத்தினை வாசிக்கும்போது உடல் சிலிர்க்கிறதல்லவா? ஆம், வேதாகமம் போதிக்கும் புத்திமதியினை தலைவணங்கி ஏற்றுக்கொண்டால் நம் வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாய் இருக்கலாம்.

இந்த மாத சிறுவர் பகுதி உங்களோடு நிச்சயம் பேசியிருக்கும் என நம்புகிறேன். உங்கள் தீர்மானங்களை, சாட்சிகளை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்புங்கள். அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான கதையோடு உங்களை சந்திக்க வருகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. டாட்டா..

---

## ALPHABETICAL SIGNS OF CHRIST'S COMING

A - Apostasy in the Church - 2 Timothy 3:5
B - Blood and fire and pillars of smoke - Joel 2:30
C - Counterfeit Christs - Mark 13:22
D - Distress of nations - Luke 21:25
E - Earthquakes multiplying - Matthew 24:7
F - Famines - Matthew 24:7
G - Greatest tribulation - Mark 13:l9
H - Hearts of Men failing for fear - Luke 21:26
I - Increase of travel and speed - Daniel 12:4
J - Judgment of pestilence - Matthew 24:7
K - Knowledge increases - 2 Timothy 3:7
L - Lawlessness spreads - 2 Timothy 3:3
M - Mockers, scoffers arise - 2 Peter 3:4
N - Noah’s day revived - Matthew 24:37
O - Outpouring of the Holy Ghost - Joel 2:23
P - Portrayal of God's power - Haggai 2: 6, 7
Q - Quest for pleasure - 2 Timothy 3:4
R - Riches accumulate - James 5: 1, 2, 3
S - Spiritism doctrine grows - I Timothy 4:1
T - Turning away from the truth - 2 Timothy 4: 3, 4
U - Unprecedented wars and rumors of wars - Luke 21:9, 10
V - Vast northern power to arise - Ezekiel 38
W- Worldwide evangelism - Mark 13:10
X - Exceptional astromical signs - Luke 21:25
Y - Young people will be disobedient to parents - 2 Timothy 3:2
Z - Zionism-restoration of the Jews to Palestine - Luke 21:29-31

***K. A. Murch***



# Perfect Victory


## Rev. பெகின் சாமுவேல்

(AGCM Director)


வெற்றி வேந்தனாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நாட்களில் நடைபெற்ற AGVBS'22 பயிற்சி முகாம்களை கர்த்தர் ஆசீர்வதித்து தந்தார். உங்களில் சிலர் அதில் பங்கு பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய ஜெபங்களுக்காக கர்த்தரை நன்றியுடன் துதிக்கிறேன். வரும் கோடை விடுமுறை நாட்களில் உங்கள் சபைகளில் நடைபெறும் விடுமுறை வேதாகமப் பள்ளிக்காக ஜெபியுங்கள். உங்கள் பங்களிப்பை ஏதாகிலும் ஒரு வகையில் சிறப்பாக அளியுங்கள். சிறுவர் ஊழியத்தின் மூலமாக கர்த்தர் இந்த வருடத்திலும் ஒரு மாபெரும் இரட்சிப்பை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்த நம் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்வோம்.

இந்த மாதம் உங்கள் பிள்ளைகளுக்கு மிக முக்கியமான மாதம். பள்ளி இறுதித்தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கிறது. பிள்ளைகள் மிக உற்சாகமாக படித்து தங்கள் தேர்வுக்காக ஆயத்தப்படுவார்கள் என்று நினைக்கிறேன். இந்த இதழிலும் பிள்ளைகள் தேர்வுகளில் வெற்றிபெற சில ஆலோசனைகளை வழங்க விரும்புகிறேன். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும்...(யாக்.1:5) என்று வேதத்தில் தேவனை சம்பூரணர் என்று அறிகிறோம். அதாவது சிறப்பாக, நிறைவாக தருபவர்.

வெற்றியடைய, அதிலும் சிறந்த வெற்றியடையவே, நாம் அனைவரும் விரும்புகிறோம். யாரும் தோல்வியை விரும்புவதில்லை. நம் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் நாம் ஜெயிக்க வேண்டும். நம் இலக்கை அடைய வேண்டும் என்பதே நமது துடிப்பாக இருக்கிறது. நம் தேவனும் தம்முடைய பிள்ளைகள் தோற்பதை விரும்பாதவர். கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, (1கொரி 2:14) என்று வாசிக்கிறோம்.

### Perfect Prayer:

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். ஜெயத்தைத் தருகிறவர் கர்த்தர் மட்டுமே. எந்த சூழ்நிலையிலும் ஜெபத்தை விட்டு விடாதிருங்கள். ஏனெனில் ஜெபமே ஜெயம். (Prayer Brings Victory). ஜெபமே உங்கள் வாழ்வின் வெற்றிக்கு முதல் படி.

### Perfect Planning:

தேவன் தரும் இந்த வெற்றியை பெறுவதற்கு நம்மில் காணப்பட வேண்டிய ஒரு முக்கிய காரியம் என்னவென்றால், சிறந்த திட்டமிடுதல் (Perfect Planning) ஆகும். Well planned is half done என்று சொல்லக் கேட்டிருப்போம். உங்கள் தேர்வுக்காக ஒரு சிறந்த திட்டமிடுதல் அவசியம். எந்தெந்த பாடங்களை எப்படி படிக்க

வேண்டும்? எந்த நாட்களுக்குள்ளாக முடிக்க வேண்டும் என்று சரியாக திட்டமிடுங்கள்.

**Perfect Preparation:**

வேதம் சுட்டிக்காட்டும் வெற்றியாளர்களின் வாழ்க்கையை நன்கு ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் அதை எளிதாக பெற்றுவிடவில்லை. அதற்கென்று சில நாட்கள், மாதங்கள் ஏன் சிலர் சில வருடங்கள் கூட ஆயத்தப்பட்டார்கள். “Proper Preparation Prevents Poor Performance.”- James Baker. ஆபிரகாம் வாக்குத்தத்தமாகிய ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க சுமார் 25 வருடங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டான். யோசேப்பு சிறந்த வெற்றியாளனாக அரியணையில் அமர, தன் வாலிபப்பருவத்தில் ஆயத்தப்படுத்தப்பட்டான். மோசேக்கு ஒரு வனாந்திரம் ஆயத்தம் பண்ணப்படுகிற இடமாக இருந்தது. அதனால் தான் பல லட்ச ஜனங்களை தனி ஒரு தலைவனாக நடத்தி செல்ல முடிந்தது. தாவீது ஒரு மேய்ப்பனாக இருந்து ராஜ ஸ்தானத்திற்கு தன்னை ஆயத்தப்படுத்தினான். இவர்களெல்லாரும் தலைசிறந்த வெற்றியாளர்களாக மாறினார்கள்.

**Perfect Presentation:**

நீங்கள் திட்டமிட்டு, பல நாட்களாய் ஆயத்தம் பண்ணினதை சிறப்பாக Present பண்ண வேண்டும். சிலர் நன்கு திட்டமிடுவர். அதோடு விட்டுவிடுவர். சிலர் நன்கு திட்டமிட்டாலும், ஆயத்தம் செய்தாலும் Present பண்ணுவதில் தவறிவிடுவர். நீங்கள் ஆயத்தம் பண்ணினதை உங்கள் தேர்வுகளில் மிக நேர்த்தியாக Present பண்ணுங்கள். மேற்குறிப்பிட்ட மூன்று படி நிலைகளுமே ஒரு சிறந்த வெற்றியாளனுக்கு தேவையானதாகும்.

அன்பான பிள்ளைகளே, முகமது அலி என்ற உலகப்புகழ் பெற்ற குத்துச்சண்டை வீரர் தன்னுடைய பயிற்சி மிகக் கடுமையாக இருக்கும்போது, அந்த பயிற்சி காலம் (Training Period) என்கிற ஆயத்தத்திற்கான நாட்களை வெறுத்தார். அப்பொழுது தனக்குள்ளே இவ்வாறு சொல்லுவாராம்: ‘விட்டுவிடாதே. இப்பொழுது உன்னை வருத்தி ஆயத்தப்படு. உன் வாழ்நாள் முழுவதும் நீ சாம்பியனாக வாழலாம்.’ தேவன் தரும் சிறப்பான வெற்றியை சுதந்தரிக்க விரும்புகிறாயா? வேதம் சொல்கிறது. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய் (பிரசங்கி 9:10). கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. வெற்றி உங்களுடையதே. நீங்கள் ஜெயிக்கப் பிறந்தவர்கள். ஆமென்.

---



“If Christians were putting into their spiritual walk the kind of discipline that athletes put into their chosen sport, the church would be pulsating with revival life. ”

-Warren Wiersbe

# இயேசுவை பின்பற்றுவதற்கு கடினமான தேசங்கள்

இயேசுவை பின்பற்றுவதற்கு கடினமான தேசங்களை கீழே காண்கிறோம். இந்த தேசங்களில் கிறிஸ்தவத்திற்கு விரோதமான உபத்திரவங்கள் அதிகமாக உள்ளன. உலகிலேயே கிறிஸ்தவர்கள் அதிகமாக துன்பப்படும் தேசங்களில் வடகொரியா முதல் இடத்தில் உள்ளது. இந்தியா பத்தாவது இடத்தில் உள்ளது. உபத்திரவத்தின் அளவையும் தீவிரத்தையும் கணக்கில் கொண்டும் இந்த தேசங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| தீவிர துன்புறுத்தல்<br>Extreme Persecution | மிக அதிக துன்புறுத்தல்<br>Very High Persecution | | அதிக துன்புறுத்தல்<br>High Persecution |
|---|---|---|---|
| 1. வட கொரியா | 11. சிரியா | 25. மவுரிடானியா | 41. இரஷ்யா |
| 2. ஆப்கானிஸ்தான் | 12. நைஜீரியா | 26. துருக்கி | 42. மலேஷியா |
| 3. சோமாலியா | 13. ஈராக் | 27. சீனா | 43. குவைத் |
| 4. லிபியா | 14. மாலத்தீவு | 28. எத்தியோப்பியா | 44. ஓமன் |
| 5. பாகிஸ்தான் | 15. சவுதி அரேபியா | 29. தஜிகிஸ்தான் | 45. ஐக்கிய அரபு நாடுகள் |
| 6. சூடான் | 16. எகிப்து | 30. இந்தோனிஷியா | 46. இலங்கை |
| 7. எரித்திரியா | 17. உஸ்பெக்கிஸ்தான் | 31. ஜோர்டான் | 47. கொலம்பியா |
| 8. ஏமன் | 18. மியான்மர் | 32. நேபாளம் | 48. பங்களாதேஷ் |
| 9. ஈரான் | 19. லாவோஸ் | 33. பூட்டான் | 49. பாலஸ்தீனிய பிரதேசங்கள் |
| 10. இந்தியா | 20. வியட்நாம் | 34. கஜகஸ்தான் | 50. அஜர்பைஜான் |
| | 21. மத்திய ஆப்பிரிக்க குடியரசு | 35. மொரோக்கோ | |
| | 22. அல்ஜீரியா | 36. புருனை | |
| | 23. துருக்மெனிஸ்தான் | 37. துனிசியா | |
| | 24. மாலி | 38. கத்தார் | |
| | | 39. மெக்ஸிக்கோ | |
| | | 40. கென்யா | |

## ஜெபியுங்கள்

- இந்த தேசங்களில் தேவன் திறந்த வாசலை ஏற்படுத்த ஜெபிப்போம்.
- இந்த தேசங்களில் வாழும் கிறிஸ்தவர்களுடைய பாதுகாப்பிற்காகவும் திருச்சபைகளின் பாதுகாப்பிற்காகவும் தேவனிடத்தில் மன்றாடுவோம்.
- இந்த தேசத்தில் இருக்கும் விசுவாசிகள் அனைவரும் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும், கர்த்தருடைய அன்பை வெளிப்படுத்தவும் அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபிப்போம்.
- விசுவாசிகளை உபத்திரவப்படுத்துகிறவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

https://www.opendoorsusa.org/christian-persecution/world-watch-list/

## போட்டி எண் : 92 அப்போஸ்தலர் (சரியான விடைகள்)

1. சீஷன் - அனனியா
2. நியாயசாதுரியன் - தெர்த்துல்லு
3. பட்டணம் - அலெக்சந்திரியா
4. சின்னத்தீவு - கிலவுதா
5. கப்பல் - அதிரமித்தியம்
6. மகாதேவி - தியானாள்
7. பட்டாளம் - அகஸ்து
8. நேர்த்தெருவு - தெரு
9. வாயாடி - பவுல்
10. தர்சு பட்டணம் - சவுல்
11. ஆறுதலின் மகன் - பர்னபா
12. கடுங்காற்று - யூரோக்கிலிதோன்
13. சீஷி - தபீத்தாள்
14. அகாயா நாட்டு அதிபதி - கல்லியோன்
15. நல்லவன் - கொர்நேலியு
16. வாக்கிலும செய்கையிலும் வல்லவன் - மோசே
17. விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவன் - ஸ்தேவான்
18. கனம் பெற்ற நியாயசாஸ்திரி - கமாலியேல்
19. துறைமுகம் - பேனிக்ஸ்
20. மாயவித்தைக்காரன் - எலிமா
21. விவேகமுள்ள மனுஷன் - செர்கியுபவுல்
22. தட்டான் - தெமேத்திரியு
23. தீவு - மெலித்தா
24. சுவிசேஷகன் - பிலிப்பு
25. தியத்தீரா ஊர் - லீதியாள்

---

## போட்டி எண் : 92 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:** N.ரோஸ்லின்; R.எஸ்தர் கலா; N.அன்னாள்; M.ஜெனிபர்; A.மஞ்சு; K.டோரா; E.கலா; S.பிரேமலதா; R.மரகதம்; G.முத்துலெட்சுமி; D.பிரபா; R.ராணி; S.இந்திரா; S.ரக்ஷனா; V.விஜி; N.K.கோகிலா; K.ராஜீ; M.எஸ்தர்; M.கனகவல்லி; K.மஞ்சு; T.சாந்தி; S.அமுதா; சித்ரா பிளஸ்சி; J.சுமதி; K.மகேஸ்வரி; S.சித்ரா; R.பேபிகலா; A.புனிதவள்ளி; T.சாராள்; C.எஸ்தர்; S.முத்துலெட்சுமி; மாளவிகா; கிரிஜா; S.ஜெயா; பியூலா; தாவீது மாரிமுத்து; பொம்மி; பூங்கோதை; மாது; மயில்; ராதாமணி; குளோரி; G.ஏஞ்சல்; A.ஹெப்சி; R.ஜெயசிலின்; | **திருநின்றவூர்** : கேத்ரின்; ஷீபா ரென்ஸ்; ஏடா டாரியா; நாகஜோதி; அம்மு; வின்சி; லீலா; ரூத்; ராஜேஸ்வரி; கௌதமி; சிவானந்தம்; ரோஸி; எழிலரசி; |**ஸ்ரீவில்லிபுத்தூர்** : அனிதா; நித்யா; நெல்சன் செல்வராஜ்; ஜெயராணி; காபிரியேல்; புஷ்பா; கிறிஸ்டி பிரியா; தேவபிரியா; மெசி குமாரி; ஆபிரகாம்; | **அச்சிறுப்பாக்கம்** : ஜென்ஸி; செல்வகுமாரி; கல்பனாதேவி; ஸ்டீவாக்; திரேசா; சுதா; கிருத்திகா; வினிஷா; நிவேதா; | **இறச்சகுளம்**: ஷோபா; ஜேஸ்மின்; அஜிதா; சிவதர்ஷினி; கலா; கனகமணி; ஜெஸி; ஷாலினி;

## போட்டி எண் : 92 (சரியான விடை எழுதியவர்கள்)

எஸ்தர்; |**மதுராந்தகம்** : மெர்லின் ஹரிணி; ராணி; நேசம்; சுந்தரி; சங்கீதா; பிரின்ஸி; சுனிதா ரோஸ்லின்; | **எடப்பாடி**: மாலதி; புஷ்பா; ஜோசப்மேரி; மெர்சி; சுதா; பிரியா; லீதியாள்; | **வீராணம்** : கலைவாணி; ஜாய்ஸிராணி; பாக்யா; சந்திரா; எப்சிபா; பிளாரன்ஸ் நைட்டிங்கேல்; |**ஆறுமுகநேரி** : சுகிர்தா; வெண்ணில எஸ்தர்; ஜாய்ஸ்மேரி; பானுமதி; கஸ்தூரி; | **மதுரை**: மகேஸ்வரி; நற்குணம்மேரி; ரூபி சாலம்மாள்; கனகவல்லி; ஜேசுராஜ்; மேரி; | **புளியங்குடி** : ஜெபஞானம்; சுந்தரி; எஸ்தர் ராணி; ஞானமணி; ஜெயமணி; | **தேனி**: பொன்மணி ஜான்சி; தனம்; திரவியச்செல்வி; கார்த்திகேயாயினி; கிருபா; | **கீழ்வேளூர்** : பிரியங்கா; சிவசூர்யா; ஜெகன்நாதன்; உமா மகேஸ்வரி; கிரேனாப்பு; | **கடையநல்லூர்** :ஸ்டெல்லா; தங்கராஜ்; ஆஷாதேவி; வினோலியா; பெட்சன்; | **ஒட்டப்பிடாரம்**: ஞானவரவு; ராமலெட்சுமி; மாரியநேசம்; சரஸ்வதி; சுப்ரமணியன்; | **திருச்சி** : வசந்தி; கிறிஸ்டி மகாலெட்சுமி, சாந்தி ஆனந்தன்; R.சாந்தி; மேரிசுஜாதா; | **கல்லல்** : ஹோபியா மோனிகா; அபிஷாக்; ஜோஸ்பின்; எபி; அமுதாராணி;|**ஆலங்குளம் (வி)** : ஸ்டெல்லா மேரி; பிளாரன்ஸ்; கிருபா; ரெஜினா சாரு; K.ஸ்டெல்லா:| **தூத்துக்குடி**: செல்லத்தாய் ராணி; சுசிலா; வினிஷா; மல்லிகா சோபி; |**செங்கல்பட்டு**: சத்ய ஷீலா; தங்கமணி; சித்ரா; பவித்ரா ஷெரில்; |**வத்ராப்** : கிரேஸ்; கல்பனா; சிவகாமி; ஜெஸ்சி; |**செய்துங்கநல்லூர்**: அன்பு; முத்துகுமாரி; வனிதா; சாந்தி; | **நாசரேத்**: தாசன்மோசஸ்; எஸ்தர்; மெர்சி; |**நாகர்கோவில்** : ஏஞ்சல்குமார்; அஜி ஸ்டெல்லா; மரியநேசம்; |**சென்னை** : நிர்மலா எஸ்தர்; மெர்லின் ஹெலன் பிரீதியா; சந்த்ரா பாய்; | **கோவை** : மேரி டென்சில்; குளோரிபால்; கிறிஸ்டினா அபிகாயில்; | **பாளையங்கோட்டை** : பிரேமா ரூத்; சில்வியா; விஜயராணி; | **அரும்பாக்கம்** : அல்போன்சா; மேரி; பூஜா; கவிதா; |**கூவத்தூர்** : விஜயா; சிவா ஆல்பர்ட்; எட்வர்ட் | **சாத்தூர்** : சங்கீதா; கீதா வசந்தகுமாரி; | **தர்மபுரி** : எப்சிபா; ரூத் : | **பூண்டி**: அமுதா; கலாவதி; | **மன்னார்குடி** : அருண்;ஷீபா; |**குரோம்பேட்டை** : ரெபேக்காள்; தாமரைச்செல்வி; |**உதிரமேரூர்** : ஜூலியட்; ஜெனிதா; | **பெருங்குளம்** ; கௌசல்யா; பியூலா; |**திருநெல்வேலி** : இவாஞ்சலின் சாரோன் ரோஸ்; சாந்தி; சார்லெட் செல்வி; | **தாழையூத்து** : சகுந்தலா; மெர்சி; | **ஆத்தூர்** : சகாயராணி; டெல்பின் ஹெப்சியா மேரி; |**புதுக்கோட்டை** : மின்னல்கொடி; லலிதா; | **பெரியகுளம்** : பாப்பாத்தி; மனோகாசி; |**ஆண்டிபட்டி** : புளோரியா; தேவபாக்கியம்; |**கடாட்சபுரம்** : ரேவதி; சுசிலா; | **வேலூர்** : வில்லியம் மார்டின் லூதர்; | **ஆழ்வார்குறிச்சி** : ஹரிலீலா; | **வில்லியனூர்** : ஷீபா; | **அகஸ்தியர்பட்டி** : நிர்மலா; | **பாவூர்சத்திரம்** : ஜெசிலி; | **உடுமலை (தி)** : சரண்யா; | **இராமன்புதூர்** : லீதியாள்; | **பெருந்துறை** : கெத்சியாள்; |**வல்லம் (த)** : விஜி; |**நீலகிரி**: புஷ்பமாலா; |**திசையன்விளை** : ஜெயசீலி; |**வடக்கு ஆத்தூர்** : ரூத் பாக்யவதி ; |**சுரண்டை** : குளோரி ஞானம்; |**திருவாரூர்** : பாஸ்ட்டியன் ; | **ஓசூர்** : ஜெமிந்தா; ஜடா; |**களக்காடு** : விமலாபாய்; ரோஸ்லின்; | **ஏர்காடு** : டேவிட்; **மேடவாக்கம்**: ஜமுனா; |**பசுவந்தனை (தூ)** : கிருபா ஷாலிக்கா; |**பாபநாசம்** :வளர்மதி ; |**பழனி**: பரீத்தி; |**திருநெல்வேலி** : ஜெயமேரி; | **நெல்வாய்** : அமலா; **ஆம்பூர்** : கிரிஜா சத்யா; |**பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி; | **சின்னாளபட்டி** : சலோமி; **ஜலகண்டாபுரம்** : சூசன்; | **கொங்கத்தான்பாறை** : சந்திரா; |**முத்தையாபுரம்** :அன்னாள் மேரி;|**ஆத்தூர்** : பிளாரன்ஸ்; | **நாகப்பட்டினம்** : வின்சென்ட்ராஜ்; |**சேத்துப்பட்டு**: செல்வி; |**ஆழ்வார்திருநகரி** : மரியாள்; | **சூளைமேடு** : அருள்மேரி; | **கோவில்பட்டி** : லோட்டஸ்; |**கம்பம்** : ஜோதிமணி; ; |**மேலப்பாளையம்** : வனிதா; | **அகஸ்தியர்பட்டி**: பத்மாவதி; |**வேலூர்** : விமலாராணி; | **திருச்செந்தூர்** : எஸ்தர்ராணி ; | **மேடவாக்கம்** : சகுணா; | **திருப்பத்தூர்** : ரூபி;|**வில்லுக்குறி** : ராஜன்; | **நெய்யூர்** : ஷீபா; | **கிருஷ்ணகிரி** : அனு; | **விருத்தாசலம்** : சுகிர்தா; |**நாகமலை** : விஜிலா; | **பழையகாயல்** : எலிசபெத் ; | **திருவள்ளூர்** : சரண்யா; டெனிசிலா; | **வாணியன்சத்திரம்** : அமலா; | **புதுக்கோட்டை** : பெனாயா; | **குற்றாலம்** : ரூத்; | **பள்ளிக்கரணை** : பொன்செல்வி; **கும்மிடிப்பூண்டி** : இம்மானுவேல்; | **பண்ருட்டி**; ராஜம்மாள்; |**சங்கரன்கோவில்** : ஏஞ்சல்; |**ஆளபாக்கம் (செ)** : ஜெயபிரபு நடராஜன்; |**திருக்கோவிலூர்** : லஷ்மிதேவி; |**திருவாரூர்** : கிளமாண்டின்

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -93

(ரோமர்) இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. கேள்வி __________ வரும்.
2. உங்கள் __________ தூஷிக்கப்பட __________ .
3. __________ மரணம். __________ ஜீவனும் சமாதானமுமாம்
4. நீ __________ நிற்கிறாய். __________ சிந்தையாயிராமல் பயந்திரு.
5. பரீட்சை __________ உண்டாக்குகிறது
6. ஒருவரிடத்திலொருவர் __________ கடனேயல்லாமல் __________ கடன்படாதிருங்கள்.
7. __________ பட்சபாதமில்லை.
8. __________ ஞானிகளும் __________ பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.
9. தேவனை மகிமைப்படுத்தி __________ வல்லவனானான்.
10. கூடுமானால் __________
11. __________ மரணம்
12. விசுவாசத்தினாலே வராத யாவும் __________.
13. __________ மனுஷன் நான்.
14. ஆவியின்படி __________ உண்டாகும் __________ விருத்தசேதனம்.
15. __________ அல்ல __________ அல்ல இரங்குகிற தேவனாலேயாம்.
16. __________ இல்லை, தேவனைத் __________ இல்லை.
17. நமக்கே __________ நடவாமல் __________ பலவீனங்களைத் தாங்க வேண்டும்.
18. எவர்களுடைய __________ மூடப்பட்டதோ அவர்கள் __________
19. நான் __________ செய்யாமல், நான் __________ செய்கிறேன்
20. பாவம் பெருகின இடத்தில் __________ அதிகமாய்ப் பெருகிற்று.

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 8.06.2022**

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## Women's Camp, Sattur









## Missions Meeting, Madurai









**அகில இந்திய ஏ.ஜி மாநாடு**
**ஜூன் 14-16**

**தமிழ் பிரதேச ஏ.ஜி மாநாடு**
**ஜூலை 12-14**

Registered News Paper Regd. No. 8206 / 62

## CA Leaders Meeting, Madurai









# எழுப்புதலின் 10 ஆண்டுகள்

# DECADE OF REVIVAL

## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165